SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
1-15 மார்ச் 2026
₹25
Volume : 46 Issue : 18
www.samarasam.net

நாடாளுமன்றத்தின் மாண்பைக் குலைக்கும் பாஜக

ஏழைகளை ஜகாத் மூலம் செல்வந்தர்களாக்கும் 10 அம்சத் திட்டங்கள்

நோன்புப் பெருநாள் சிறப்பிதழ்



# நோன்பும் பெருநாளும்

## கேட்கப்படாத கேள்விகளும் சொல்லப்படாத பதில்களும்

# CONNECTING HEARTS TO HOLY LAND



Insha Allah

# 2027 - 1448

# HAJJ

BOOKING OPENS

- Supreme Package
- Premium Package
- Comfort Package

ACCREDITED TRAVEL AGENT IATA INTERNATIONAL AIR TRANSPORT ASSOCIATION

**RICHWAY**
TOURS & TRAVELS
HAJJ · UMRAH · ZIARAH

RECOGNIZED BY GOVT. OF INDIA - MINISTRY OF MINORITY AFFAIRS

THOA

Phone : 0422 - 2550880, Mobile : 98422 55222, 94877 55222 , 94421 55222, 98433 62273

HAJJ UMRAH RICHWAY RIGHTWAY

*"Pleasure to serve the guests of Allah"*

32 YEARS OF EXPERIENCE


70MM
MALE CLOTHING
THE NEW
STANDARD
SHIRTS | T SHIRTS | TROUSERS | ACCESSORIES
VISIT YOUR NEAREST 70MM STORE
7305053323
70MMMALECLOTHING
70MMMALECLOTHING

# ADMISSION NOTICE

# THASSIM BEEVI ABDUL KADER COLLEGE FOR WOMEN

A Minority Institution Sponsored by Seethakathi Trust, Chennai
Recognized by DBT under Star College Scheme, Ministry of Science and Technology, Govt. of India.
An Autonomous Institution Affiliated to Alagappa University, Karaikudi.
Accredited by NAAC with "A" Grade [CGPA:3.16] & ISO 9001:2015 Certified Institution.
Recognized by UGC under 2(f) & 12 (B). Kilakarai – 623517, Ramanathapuram District
**Phone :** 04567 - 241934 / 241933 **E-mail :** principal@thassim.ac.in



Dr. B.S.Abdur Rahman
Founder

## UG PROGRAMMES (3 Years-Regular)

Part-I Language options for four semesters
Tamil, Arabic & Hindi

### ARTS, COMMERCE & MANAGEMENT

- B A Afzal-Ul-Ulamah
- B A English
- B Com
- B Com with Computer Applications
- B Com Professional Accounting
- B B A

### LIFE SCIENCE, FOOD SCIENCE, COMPUTATIONAL SCIENCE AND SOCIAL SCIENCE

- B Sc Nutrition and Dietetics
- B Sc Costume and Fashion Design
- B Sc Information Technology
- B Sc Computer Science
- B Sc IT with Cyber Security
- B C A
- B Sc Artificial Intelligence & Data Science
- B Sc Mathematics
- B Sc Chemistry
- B Sc Microbiology
- B Sc Biotechnology
- B Sc Psychology

## PG PROGRAMMES (2 Years-Regular)

- M A English
- M Com
- M Sc Nutrition and Dietetics
- M Sc Costume and Fashion Design
- M Sc Information Technology
- M C A (2 Years) AICTE Approved
- M Sc Mathematics
- M Sc Chemistry
- M Sc Microbiology
- M Sc Psychology

## RESEARCH PROGRAMMES

**Ph D** (Full Time / Part Time)

- Ph D in Commerce
- Ph D in Computer Science
- Ph D in Home Science
- Ph D in Chemistry

**Collaborative Diploma & Advance Diploma Special Education Programmes**
One Year Programme UG Degree / UG Degree with B.Ed can apply

- Diploma in Child Development and Sensory Processing
- Diploma in Differentiated instruction for Diverse Learners in the Regular Stream
- Advanced Diploma in Inclusive Practices
- Advanced Diploma in Child and Adolescent Play Therapy
- Advanced Diploma in Inclusive Pedagogy
- Advanced Diploma in Therapeutic Recreation and Rehabilitation

Hands-on laboratories Training, Field visits, Industrial exposure for science students under DBT Star College scheme

Open source Geospatial Knowledge Centre for the Ramnathapuram district in collaboration with IIT Bombay

Monthly Stipend for meritorious Research Scholars

Research Collaboration with Industries / Universities

Diploma in Muballiga for All Muslim Students in collaboration with UNIS Academy

Full time Muallama and Muballiga for Hostel Muslim students

Well-furnished Hostel, Free Wifi, Nutritious Food, Fitness Centre, Indoor & Outdoor Games Facilities

Well Equipped Central Library and E-Library

College Bus Facilities

Japanese Language Learning Centre

Rs.1000/- concession for the pre-Registration seats from 20th April 2026 to 5th May 2026.

### CONCESSION ON TUITION FEE FOR SPORTS PLAYERS

| Participation in International | Participation in National | Participation in State Level | Winner in District Level |
|---|---|---|---|
| 100% | 75% | 50% | 25% |

Recognised by State and Central Government Sports Development Authority

### CONCESSION ON TUITION FEE FOR MERITORIOUS STUDENTS

| PG PROGRAMME | Percentage in UG | 90% above | 85 - 89% | 80 - 84% | 75 - 79% |
|---|---|---|---|---|---|
| | Concession | 100% | 75% | 50% | 25% |

Fees Concession for State, District and Regional Level Toppers

**CONCESSION ON TUITION FEE FOR ALUMNAE STUDENTS (25% for All PG Programmes)** **Free Hostel for PG & Ph.D Students**

**Rs.2000/- concession for the students from the sister institutions at the time of admission.**

**Mr Arif Buhary Rahman**
Chairman

**Alhaj Khalid A K Buhari**
Secretary

**Dr Rahmathunisa Abdur Rahman**
Correspondent

**Dr S Sumaya**
Principal

93424 54601, 93424 54632
94426 17038, 94426 17021

: admissionstbakc@thassim.ac.in

Admission through website :
**www.thassim.ac.in**

## உள்ளே...




**9** இந்தியாவின் அவமானம்
- தலையங்கம்

**10** நோன்பும் பெருநாளும்
கேட்கப்படாத கேள்விகளும்
சொல்லப்படாத பதில்களும்
- வி.எஸ்.முஹம்மத் அமீன்

**16** ரமளானும்
3 கேள்விகளும்
- மௌலவி M.M. முஹம்மத்
இஸ்மாயீல் இம்தாதி

**24** ஏழைகளை ஜகாத் மூலம்
செல்வந்தர்களாக்கும்
10 அம்சத் திட்டங்கள்
- H. அப்துர் ரகீப்

**38** நாடாளுமன்றத்தின் மாண்பைக்
குலைக்கும் பாஜக
- சேயன் இப்ராகிம்

**42** பெண்களுக்குப் பாதுகாப்பையும்
கண்ணியத்தையும் தருவது யார்?
- உம்மு ரய்யான்

**46** ரமளான் உருவாக்குகின்ற
முத்தான மூன்று பண்புகள்
- சையத் சஆதத்துல்லாஹ்
ஹுசைனி

**52** கொடை
- சாந்த் உஸ்மானி

**57** ரமளான்
கவிதைகள்
- லத்தீஃபா இக்பால் மைந்தன்

**56** கடைசிப் பக்கம்:
ஜகாத் கணிப்பான்
Zakatify - Easy Zakat Calculator


**நோன்புப் பெருநாள்
சிறப்பிதழ்**

*வாழ்க்கைப் பாடங்கள், அக்கரைப் பச்சை தொடர்கள் அடுத்த இதழில் இடம் பெறும்.*

**வாசகர்கள், எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள்
அனைவருக்கும் இதயம் கனிந்த நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகள்**


ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு
விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்
அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net




## நேருவை அவர்கள் மறக்க மாட்டார்கள்

சங் பரிவாரங்கள் ஒருவரைத் தீவிரமாக எதிர்க்கின்றன என்றால் அவர் நாட்டிற்கு நல்லது செய்திருக்கிறார் என்று அர்த்தம். நேரு இறந்து பல ஆண்டுகள் கடந்த பின்னரும் அவரை காங்கிரஸ் நினைக்கிறதோ இல்லையோ சங்கப் பரிவார்கள் மறக்கவில்லை. எனவே மீண்டும் மீண்டும் நேரு பேசப்பட வேண்டும்.

– N. பாபு அருள் ஜோஷி, களக்காடு

## இன்றைய தலைமுறை நேருவை வாசிக்க வேண்டும்

இந்தியாவின் முதல் பிரதமர் நேரு பற்றிய அட்டைப்படக் கட்டுரை சிறப்பு. அவர் தான் விடுதலை பெற்ற இந்தியாவை வளப்படுத்த ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டியவர். பல தொழிற்சாலைகளைத் தொடங்கியவர். உலகம் போற்றப்பட்ட தலைவர். ஆனால் மோடி அரசுக்கு காந்தி, நேருவைப் பிடிக்காது. திட்டம் தீட்டி இந்த இருவரின் பெயர்களை நாட்டின் பல திட்டங்களில் இருந்து நீக்கி வருகின்றனர். இன்றைய தலைமுறையினர் நேருவைப் பற்றியும் அவர் எழுதிய கடிதங்களையும் படிக்க வேண்டும்.

– கவிஞர் கடல் நாகராஜன், கடலூர்

## ரமளானில் பயன்பெறுவோம்

இந்தியாவின் பன்முகத் தன்மையைக் காத்தவர் நேரு. முஸ்லிம்களுக்கு அமைச்சரவையில் இடம் தந்து அழகு பார்த்தவர். இந்த வரலாறு இன்றைய தலைமுறைக்குத் தேவை. மீண்டும் நேரு பேசப்பட வேண்டும். ரமளான் வருவதற்கு முன்பே சமரசம் ரமளானை வரவேற்று கட்டுரை வெளியிட்டு ரமளான் சிந்தனையை ஏற்படுத்தி விட்டது.

– M. லைலாம்மா, S. அஜித்தா, தேனி

## நேரில் கலந்து கொண்ட மகிழ்வு

சமரசம் இதழின் கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஆழமும் அர்த்தமும் நிறைந்தவை. நீதிமன்றங்களே நீதியைக் கொலை செய்கின்றன எனும் பிரகாஷ் ராஜின் குரல் மிக வலிமையானது. கடையநல்லூரில் நடைபெற்ற சமரசம் வாசகர் வட்ட நிகழ்வு குறித்த செய்தி அருமை. நேரில் கலந்து கொண்டது போன்ற மகிழ்வைத் தந்தது. எல்லா ஊர்களிலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெற வேண்டும்.

– S. ராமு பிள்ளை, S.R. மல்லிகா, ஒகளூர்

## துணிச்சலான கருத்து

ட்ரம்பின் அடாவடிகள் குறித்த தலையங்கம் வாசித்தேன். ட்ரம்பின் செயல்பாடுகளை உலக நாடுகள் கட்டுப்படுத்த முன் வராதது ஏன்? நேரு குறித்த முகப்புக் கட்டுரை இன்றைக்குத் தேவையான கட்டுரை. பிரகாஷ் ராஜின் கருத்து துணிச்சலானது. உண்மையானது. நாகூர் ஹனீஃபாவின் பாடல்களைக் கவிதையாய் வடித்த விதம் அருமை.

– இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

## நியாயத்தின் குரல்

மீண்டும் மீண்டும் நேரு பேசப்பட வேண்டும் என்பதை ஒரே வரியில் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டீர்கள். தங்களால் செய்ய முடியாதவற்றை நேருவின் மீது பழி சுமத்தி தப்பித்துவிடப் பார்க்கிறது பாஜக அரசு. திருப்பரங்குன்ற நிகழ்வில் சகோதர சமுதாயத்தினர் நியாயத்தின் பக்கம் நின்று நம் நாட்டின் மதச்சார்பற்ற தன்மையை நிரூபித்துள்ளார்கள். சோழா புகழேந்தியின் கவிதை மனம் கவர்ந்தது. நாகூர் ஹனீஃபா நம் சமுதாயச் சொத்து. அவர் குறித்த கவிதை சிறப்பு.

– ப. பீர் இலாஹி, உத்தமபாளையம்

## அணைக்க வேண்டிய நெருப்பு

காட்டுத் தீ போல பரவிக் கொண்டிருக்கும் ட்ரம்ப் பற்ற வைக்கும் நெருப்பலையை உலக நாடுகள் ஊதி அணைக்க வேண்டும். இன்றைய வகுப்புவாத ஆட்சி

யாளர்களுக்கு மத்தியில் நேருவைக் குறித்து பேச வேண்டிய தேவை இருக்கிறது. அநீதியான தீர்ப்புகளைக் குறித்த சேயன் இப்ராகிமின் கட்டுரை பல உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியது. இயக்குநர் மீரா கதிரவனின் நேர்காணல் விரிவான பார்வை.

– ப.குருசாமி, தேனி

## மக்களின் குரல்

இன்றைய அரசியல்வாதிகள் நேருவின் அணுகுமுறையைத் திரும்பிப் பார்க்க வேண்டும். காலத்திற்கேற்ற கட்டுரை. நாகூர் ஹனீஃபாவின் வெண்கலக் குரலை கவிதையால் நினைவு கூர்ந்த விதம் அருமை. மேடையில் ஒலித்த பிரகாஷ் ராஜின் குரல் ஒட்டுமொத்த மக்களின் குரல்.

– எம்.எஸ்.ஃபாரூக், திருப்பாலத்துறை

## வாசிக்க முடியாத வேதனை

நீதிமன்றங்களே நீதியைக் கொலை செய்கின்றன என்று பிரகாஷ்ராஜ் கூறியது அட்சரலட்சம் பெறும். இந்திய ஜனநாயகமும் நீதி அமைப்புகளும் எந்தக் காலத்திலும் இவ்வளவு தரம் தாழ்ந்து போனதில்லை. இஸ்லாமிய வெறுப்புக் குற்றங்கள் படிக்க மனம் மிகவும் வேதனைக்குள்ளாகிறது. அதைப் படிக்க முடியவில்லை.

– ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

## இந்தியா உள்ளவரை..!

மீண்டும் மீண்டும் பேசப்பட வேண்டும் நேரு கட்டுரை படித்தேன். உண்மையான சமயச் சார்பற்ற கொள்கையைப் பின்பற்றிய பிரதமர் ஜவஹர்லால் நேரு. இந்தியாவின் அணைக்கட்டுகளும், தொழிற்சாலைகளும் தான் தனது ஆலயங்கள் எனக் குறிப்பிட்டார். ஜவஹர்லால் நேருவின் இந்த உண்மையான மதச் சார்பின்மையை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் அவர் மறைந்து 60 ஆண்டுகளுக்குப் பின்னரும் அவரை எதிர்மறையாக விமர்சித்து வருகின்றனர். ஆயினும், இந்தியா உள்ளவரை நேருவின் புகழ் மறையாது!

– இரா.சாந்தகுமார், கூடுவாஞ்சேரி

## சந்திப்புகள் தொடர வேண்டும்

ட்ரம்பின் அடாவடிகள் முற்றுப்பெற வேண்டும். இவரைப் போல் அத்து மீறுபவர்கள் கால அலையில் அடித்து செல்லப் படுவார்கள். ஹபீபி தொடர் செயல்பாடாக மாற வேண்டும். எல்லா இடங்களுக்கும் சென்று சேரும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. கடையநல்லூரில் சமரசம் வாசகர் வட்ட சந்திப்பு மிகச் சிறப்பான நிகழ்ச்சி. பிற இடங்களிலும் இதைப் பின்பற்ற வேண்டும்.

– சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## சிந்தனை மாற்றத்தை உருவாக்கும் ஹபீபி

விடுதலை இந்தியாவின் சிற்பியான நேருவைக் குறை கூறுபவர்கள் மனிதர்களே அல்ல. இயக்குநர் மீரா கதிரவன் நேர்காணலில் எதார்த்தத்தைப் பேசியிருக்கின்றார். அவரின் தூய எண்ணமும், கடும் முயற்சியும் வெற்றி பெற வேண்டும். ஹபீபி திரைப்படம் ஒரு சிந்தனை மாற்றத்தை உருவாக்கும் என நம்புகிறேன். தலித் சினிமாக்களுக்கான காத்திரமான இடம் உருவானதைப் போல இஸ்லாமிய சினிமாக் களுக்கான இடம் உருவாக வேண்டும். அதற்கு முஸ்லிம்கள் உள்பட அனைவரும் பாடுபட வேண்டும்.

– S.A. சபீர் அஹமது, ஆணைக்காரன் சத்திரம்

## ஏக்கம் தீர்க்கும் ஹபீபி

இஸ்லாமியப் பண்பாடு தமிழ் மண்ணில் காலம்காலமாக வேரூன்றி நன்மைகளையே தந்துகொண்டிருக்கின்றது. இது பேசுபொருளாக வேண்டும் என்னும் எங்களைப் போன்றவர்களின் ஏக்கத்தை ஹபீபி தீர்த்துவைக்கும் என நம்புகிறேன். துணிச்சலோடு களம் இறங்கி இருக்கும் இயக்குநர் மீரா கதிரவன் பெயர் இத் திரைப்படம் மூலம் மக்களின் மனதில் நிறைந்து நிற்கும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

– பானு ஹமீத், ஜித்தா

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

# இஸ்லாமிக் சென்டர் – வேலூர் (ICV)

*1978 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்காக அனைத்து வசதிகளுடன் கூடிய தனித்துவமான கல்வி நிறுவனமாகும்.*

**நோக்கம்** (VISION) :

*இங்கு கல்வி பயிலும் மாணவர்களை தவ்ஹீத் மற்றும் தக்வாவின் அடிப்படையில் வாழும் ஒரு மாணவராக உருவாக்குவது. அல்லாஹ் படைத்த அனைத்து மனிதர்களும் ஒரே குடும்பம் என்ற உலகளாவிய சகோதரத்துவ கோட்பாட்டை அங்கீகரித்து சமூகத்தில் நீதி மற்றும் கருணையை நிலை நாட்ட பாடுபடுபவர்களாக அவர்களை உருவாக்குவது*

**குறிக்கோள்** (MISSION):

1. *குர்ஆன் மற்றும் சுன்னா அடிப்படையில் உண்மையான இஸ்லாமிய கல்வியை வழங்கி உறுதியான ஈமான் மற்றும் சிறந்த நற்பண்புகளை வளர்த்தல்.*
2. *அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒடுக்குமுறைகளையும் நிராகரித்து, நபி [ஸல்] அவர்கள் போதித்த சகோதரத்துவம், சமத்துவம் மற்றும் நீதி விழுமியங்களை கற்பித்தல்.*
3. *அல்லாஹ்வின் அனைத்து படைப்புகளிடமும் பணிவு, இரக்கம் மற்றும் சேவை உணர்வை வளர்த்தல்.*
4. *இஸ்லாமிய அறிவை தார்மீக ஒழுக்கம், சமூகப் பொறுப்பு மற்றும் நெறிமுறைகளுடன் ஒருங்கிணைத்தல்.*
5. *அமைதி, ஞானம் மற்றும் மனிதகுலத்தின் மீதான உண்மையான அக்கறையை வெளிப் படுத்தும் இஸ்லாத்தின் தூதுவர்களாக மாணவர்களைத் தயார்படுத்துதல்.*

*உங்களின் ஜகாத், சதக்கா மற்றும் நன்கொடை பங்களிப்புகள் இந்த நோக்கத்தை மேலும் பலப்படுத்துகின்றன.*

*பரபரப்பான இந்த வாழ்க்கை ஓட்டத்தில் எங்கள் நிறுவனத்தை மறந்து விட வேண்டாம் என்றும் தொடர்ந்து உங்களின் ஆதரவையும் உதவியும் வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.*

**ISLAMIC CENTER VELLORE**
19/4 MADAR SAHIB STREET, R.N.PALAYAM,
VELLORE - 632001 (TN - INDIA)
E-MAIL : icvellore@gmail.com

**BANK:** UNION BANK OF INDIA, VELLORE BRANCH **A/C. NO.** 33300-10100-19006. **IFSC CODE:** UBIN 0533301

**REMITTANCE THROUGH BANK WITH IN INDIA ONLY**

NOTE: PLEASE SMS TO 095001 90520 IF SENT THROUGH BANK TRANSFER AMOUNT NAME & ADDRESS

சரம் : 46
மலர் : 18

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 ரமளான் 11-25 ● 2026 மார்ச் 1-15

# இந்தியாவின் அவமானம்

இங்கிலாந்து, தென்கொரியா, பிரான்ஸ் நாடுகளில் இதுவரை நடந்த AI உச்சி மாநாடு முதன் முறையாக தெற்காசிய நாடுகளில் ஒன்றான இந்தியாவில் நடைபெறுவது இந்தியா விற்கு மிகப் பெரும் பெருமையை ஈட்டித்தரும் என்ற எதிர்பார்ப்பைத் தவிடு பொடி யாக்கி மிகப் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தித் தந்துள்ளது மோடி தலைமையிலான அரசு.

பிப்ரவரி 16ஆம் தேதி தொடங்கி 20ஆம் நாள் வரை டெல்லியிலுள்ள பாரத் மண்ட பத்தில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டை(AI Impact Summit 2026) பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். 20 நாடுகளின் தலைவர்கள், 45 நாடுகளின் அமைச்சர்கள், 30 சர்வதேச நிறுவனங்கள் உள்ளிட்ட 110 நாடுகள் பங்கேற்ற இந்த மாநாட்டில் பிரதமர் மோடி வருவதற்காகத் திடீரென முழு வளாகமும் முடக்கப்பட்டது.

‘அனைவருக்கும் வளம், அனைவருக்கும் ஆனந்தம்’ என்னும் கருப்பொருளில் நடை பெற்ற இந்த மாநாட்டில் பங்கேற்பாளர்கள் தங்களின் ஸ்டால்களுக்குள் செல்ல முடியாத அளவு கெடுபிடிகள் ஏற்பட்டன. நீண்ட வரிசை, நுழைவுக் குழப்பம், போக்குவரத்து நெரிசல், உணவு தண்ணீர் இல்லாமல் தவிப்பு, இணைய வசதிக் குறைபாடு என இம் மாநாடு பங்கேற்பாளர்களுக்குக் கூட ஆனந்தத்தைத் தரவில்லை.

பிரதமர் வந்து போகும் வரை அரங்கு காலி செய்யப்பட்ட நேரத்தில் நிறுவனங்களின் நுண்ணறிவுச் சாதனங்கள் திருடு போய்விட்டதாக நியோசேபியன் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி தனஞ்செய் யாதவ் தனது X பக்கத்தில் பதிவிட்டுள்ளார். மாநாட்டின் குழப்பங்களுக்கும், ஏற்பாட்டுக் குறைவுக்கும் ஒன்றிய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் வருத்தம் தெரிவித்துள்ளார்.

சீனாவின் யூனிட்ரீ ரோபோடாக் தயாரித்த இயந்திர நாயை(Robodog) 2 இலட்ச ரூபாய்க்கு வாங்கி வந்து தங்களின் பல்கலைக் கழக மாணவர்கள் பல கோடி ரூபாயில் உருவாக் கியதாக நொய்டாவிலுள்ள கல்கோடியாஸ் பல்கலைக்கழகம் இந்த மாநாட்டில் காட்சிப் படுத்தியது. கல்கோடியாஸ் பல்கலைக்கழகத்தின் இந்தத் தில்லு முல்லு வேலை வெட்ட வெளிச்சமாகி அந்த மாநாட்டிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

இந்த மாநாடு இந்தியாவிற்குப் பெருமை சேர்ப்பதற்குப் பதில் அவமானத்தைத் தேடித்தந்ததாக ப்ளூம்பெர்க், ராய்ட்டர்ஸ், குளோபல் டைம்ஸ் உள்ளிட்ட சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. டிஜிட்டல் இந்தியா, மேக் இன் இந்தியா என்று பெருமை பேசிக் கொண்டும் தன்னை விஷ்வ குருவாக வாய்ப்பந்தல் போட்டுத் திரியும் பிரதமர் தலைமையிலான அரசின் நிர்வாகத் தோல்வி இந்தியாவிற்கு அவமானத்தைத் தேடித் தந்துள்ளது.

தகுதியற்றவர்களின் கையில் நாடும், கல்வியும் இருந்தால் என்ன நிகழும் என்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும். கல்கோடியாஸிலிருந்து கல்வியாளர்கள் வெளி வந்தால் இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை நினைக்கவே கவலையாக இருக்கிறது. அறமற்ற ஆட்சியாளர்களையும், தரமற்ற கல்வியாளர்களையும் வைத்துக் கொண்டு உலகத் தலைமையை இந்தியா விரும்புவது பகல் கனவாகவே முடியும்.


# நோன்பும் பெருநாளும்

## கேட்கப்படாத கேள்விகளும் சொல்லப்படாத பதில்களும்

**- வி.எஸ்.முஹம்மத் அமீன்**

இந்தியா போன்ற பன்மைச் சமூகச்சூழலில் இந்த நாட்டின் ஓர் அங்கமாகத் திகழும் முஸ்லிம்கள் ஆண்டுதோறும் ரமளான் மாதம் முழுவதும் நோன்பு நோற்கிறார்கள், தராவீஹ் தொழுகின்றார்கள், பெருநாள் கொண்டாடுகின்றார்கள். சகோதரச் சமுதாயச் சொந்தங்களுடன் நோன்புக்கஞ்சியைப் பகிர்ந்து கொள்வதும், இஃப்தார் நிகழ்வுகளில் அவர்கள் பங்கேற்பதும், வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வதும் இதயங்களை இணைப்பதற்கும், நல்லிணக்கத்தை வளர்ப்பதற்குமான நல்வாய்ப்புகளாக அமைகின்றன.

ஆனால் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்கும், புரிந்து கொள்வதற்குமான உரையாடல்கள் நிகழ்வதில்லை. முஸ்லிம்கள் ஏன் நோன்பு நோற்கின்றார்கள்? பட்டினி கிடப்பதால் என்ன மாற்றம் வந்துவிடப் போகிறது? ஏன் ஒரு நாளுக்கு ஐந்து வேளைத் தொழ வேண்டும்? என்பன போன்ற கேள்விகள் இதரமத அன்பர்களுக்கு இருந்தாலும் அவர்கள் அதைக் கேட்பதில்லை. கேட்டால் முஸ்லிம்கள் ஏதாவது தவறாக நினைத்துக் கொள்வார்களோ என்ற அச்சத்தால் இது போன்ற ஐயங்களைத் தங்களுக்குள்ளேயே புதைத்து வைத்துக் கொள்கின்றார்கள். முஸ்லிம்களோ இதைப் போய் அவர்களிடம் ஏன் சொல்வானேன் என்ற மன நிலையில் கடந்து விடுகின்றார்கள்.



**கேட்டால் முஸ்லிம்கள் ஏதாவது தவறாக நினைத்துக் கொள்வார்களோ என்ற அச்சத்தால் இதுபோன்ற ஐயங்களைத் தங்களுக்குள்ளேயே புதைத்து வைத்துக் கொள்கின்றார்கள். முஸ்லிம்களோ இதைப் போய் அவர்களிடம் ஏன் சொல்வானேன் என்ற மன நிலையில் கடந்து விடுகின்றார்கள்.**



**இங்கே கேட்பதற்கும், சொல்வதற்கும் செய்திகள் இருக்கின்றன. இந்த ரமளான் நோன்பு திறப்பாக மட்டுமின்றி இதுபோன்ற உரையாடல்களுக்கான திறப்பாக இருக்க வேண்டும். இஃப்தார் நிகழ்வுகளும், பெரு நாள் சந்திப்புகளும் அதற்கான களங்களாக அமைய வேண்டும். இந்த உரையாடலுக்கு நோன்பு, தொழுகை, குர்ஆன், பெருநாள் தொடர்பான சில புரிதல்கள் மிகவும் அவசியமாகிறது.**

## நோன்பு ஏன்?

இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் நோன்பு இறைவனால் விதியாக்கப்பட்ட கடமை. ஒவ்வொரு முஸ்லிமும் ஆண்டுதோறும் ரமளான் மாதம் முழுவதும் நோன்பு இருக்க வேண்டும். நோன்பு நோற்பதால் உடல்நலத்திற்கு மருத்துவ ரீதியான நலன்கள் இருக்கின்றன. ஆனால் அதற்காக யாரும் நோன்பு நோற்பதில்லை. இறைக் கட்டளையை ஏற்று நோன்பு நோற்கும்போது அதன் உடனடிப் பலனாக உடல் நல நன்மைகள் கிடைக்கின்றன.

நோன்பின் நோக்கம் இறையச்சம். இறைவனுக்காகத் தன் உணவு, பானம், இச்சைகளை விட்டு பகல் முழுவதும் விலகி இருத்தல் என்பது இறைக்கட்டளைக்குக் கீழ்ப்படியும் மிகப் பெரும் பயிற்சி. இறைவன் தன்னைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றான் என்ற அந்த உணர்வை ஒருமாதப் பயிற்சியாக ஒவ்வொரு முஸ்லிமும் பெறுகின்றனர்.

பசித்திருத்தல் நோன்பின் முக்கியமான அம்சம் என்றாலும், தீமைகளிலிருந்து முற்றிலும் தவிர்ந்திருத்தலே நோன்பின் மையச் சரடாக இருக்கிறது.

## ஸஹர் என்றால் என்ன?

நோன்பு என்பது ஒவ்வொரு நாளும் இரவின் இறுதிப் பகுதியில் எழுந்து உணவு சாப்பிட்டுவிட்டு மறுநாள் மாலை வரை உண்ணாமல், பருகாமல் இருப்பது. நோன்பு நோற்ற நிலையில் மனைவியுடனான இல்வாழ்வில் ஈடுபடக்கூடாது. நோன்பு வைத்துக் கொண்டு அன்றாடப் பணிகளில் ஈடுபடலாம். நோன்பு இரவு முழுவதும் விழித்திருக்க வேண்டும். உறங்கக் கூடாது என்றெல்லாம் இல்லை. தாராளமாக உறங்கலாம்.

## அது என்ன தராவீஹ் தொழுகை?

ஒவ்வொரு முஸ்லிமான ஆண் பெண் மீதும் ஒருநாளுக்கு ஐந்துவேளைத் தொழுகை கட்டாயக் கடமை. இது தவிர உபரியான தொழுகைகள் தொழுது கொள்ளலாம். ரமளான் ஆன்மிகப் பயிற்சி அளிக்கும் மாதம். அதிகமான நன்மைகளைப் பெற்றுத் தரும் மாதம். எனவே அதிகமாக தொழுகை போன்ற வணக்கங்களில் முஸ்லிம்கள் ஈடுபடுவர். தராவீஹ் என்பது கட்டாயக் கடமை அல்ல. இரவு நேரம் தொழக்கூடிய சிறப்புத் தொழுகை. ரமளான் திருக்குர்ஆன் இறங்கிய மாதம் என்பதால் திருக்குர்ஆன் முழுவதுமோ, அல்லது திருக்குர்ஆனின் சில பகுதிகளோ இந்த இரவுத் தொழுகையில் ஓதப்படும்.

## திருக்குர்ஆனுக்கும் நோன்பிற்கும் என்ன தொடர்பு?

‘ரமளான் மாதம் எத்தகையதென்றால், அம்மாதத்தில்தான் மனிதர்களுக்கு (முழுமை யான) வழிகாட்டியாகவும், மேலும் நேர்வழி யின் தெளிவான அறிவுரைகளைக் கொண் டதும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக்கூடியதுமான குர்ஆன் இறக்கியருளப்பட்டது. எனவே இனி உங் களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும்’ (திருக்குர்ஆன் 2:185)

திருக்குர்ஆன் இறங்கிய மாதம் என்று மட்டும் குறிப்பிடாமல் மூன்று செய்திகளை இந்த வசனம் அழுத்தமாகக் கூறுகிறது. 1. மனிதர்களுக்கான வழிகாட்டக் கூடியது 2. நேர்வழி காட்டக் கூடியதும், தெளிவான அறிவுரைகளைக் கொண்டது 3. சத்தியத் தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக் கூடியது. இந்த மூன்று அம்சங்களை உள்ளடக் கிய குர்ஆன் இறங்கிய மாதம் இது.

திருக்குர்ஆன் முஸ்லிம்களுக்கு மட்டு மான வேதம் அல்ல. எனவேதான் குர்ஆன் முஸ்லிம்களின் வழிகாட்டி என்று குறிப் பிடாமல் முழு மனித குலத்திற்கும் வழி காட்ட வந்த வேதம் என்பதை இவ்வசனம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இந்தக் குர்ஆன் வழிபாடுகளை மட்டும் பேசாமல் வாழ்வி யலைப் பேசுகிறது. நேர்வழிக்கான ராஜபாட் டையைக் காட்டுகிறது. மனித குலத்திற்குத் தேவையான தெளிவான வழிகாட்டுதல்களை திருக்குர்ஆன் வழங்குகிறது.

சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டி சத்தியத்தின் பக்கம் மக்களை அழைத்துச் செல்லும் வேதம்தான் குர்ஆன். இப்படிப்பட்ட ஓர் அற்புதமான கொடையை இறைவன் மனித னுக்கு வழங்கியிருக்கின்றான். இதற்கு நன்றி செலுத்தும் பொருட்டு இந்த நோன்பு கடமை யாக்கப்பட்டுள்ளது.

எனவே முஸ்லிம்கள் இந்த ரமளான் மாதத்தில் ஓதலுடன் நின்று விடாமல் திருக் குர்ஆன் கூறும் வாழ்வியலை, வழிகாட்டுதல் களை ஆய்வு செய்ய வேண்டும். அதைத் தங்களது வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும். சகோதர சமுதாயச் சொந்தங்கள் குர்ஆனை வாசிப்பதுடன், ஆய்வு செய்யவும் வேண்டும்.

> இப்படிப்பட்ட ஓர் அற்புதமான கொடையை இறைவன் மனிதனுக்கு வழங்கியிருக்கின்றான். இதற்கு நன்றி செலுத்தும் பொருட்டு இந்த நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது.

## ஜகாத்தும் நோன்பும்

நோன்பு நன்மைகளின் மாதம், கருணை யின் மாதம். இந்த மாதத்தில் செய்யப்படும் நல்லறங்களுக்குப் பலமடங்கு நற்கூலி உண்டு. எனவே இந்த மாதத்தில் கூடுதலாக தான தர்மங்களை முஸ்லிம்கள் செய்வர். ஜகாத் கடமையையும் இந்த மாதத்தில் முஸ்லிம்கள் நிறைவேற்றுகின்றனர்.

ஜகாத் என்பது தங்கள் தேவைக்குப் போக சுமார் 87.5 கிராம் தங்கத்துக்கு அதிக மான செல்வம் வைத்திருப்பவர்கள் மீது கடமையாகும். தங்கள் செல்வத்திலிருந்து நூற்றுக்கு இரண்டரை விழுக்காடு கணக்கிட்டு ஏழைகளுக்கு வழங்க வேண்டும். இது விருப்பமான நல்லறம் அல்ல. கட்டாயம் செய்ய வேண்டிய கடமையாக இஸ்லாம் ஜகாத்தை வலியுறுத்துகிறது.

## இஃப்தார்

இஃப்தார் என்பது நோன்பு துறக்கும் நிகழ்வு. இரவில் ஸஹர் உணவு உண்பதைப் போல மாலையில் நோன்பு துறக்கும் ஏற்பாடே இஃப்தார். மாலை சூரியன் மறைந்த பிறகு குறிப்பிட்ட நேரத்தில் நோன்பு துறக்க வேண்டும். அதை கூட்டாக, நிகழ்வாகச் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தனியாக அவரவர்

விருப்பப்படி துறந்து கொள்ளலாம். தண்ணீர், பேரீச்சம் பழம் போதுமானது. வடை, பஜ்ஜி வகையறாக்கள், பேரீச்சம் பழம், நோன்புக் கஞ்சி என்பதெல்லாம் கட்டாயம் இல்லை. எந்த உணவை வைத்தும் நோன்பு துறக்கலாம்.

காய்ந்து போன வயிற்றுக்கு நோன்புக் கஞ்சி சிறந்த உணவாக இருப்பதால் அதைப் பள்ளி வாசல்களில் இலவசமாக விநியோகிக்கின் றார்கள். இதனால் தொழுகைக்கு முன்பாக மக்கள் பள்ளிவாசலுக்கு வந்து நோன்பு துறக் கின்றார்கள்.

தமிழ்நாட்டின் நல்லிணக்கச் சூழலுக்கு இஃப்தார் நிகழ்வுகள் பெரிதும் துணை நிற் கின்றன. இது அரசியல் இஃப்தார்களாகச் சுருங்கி விடாமல் அறிதலுக்கும், புரிதலுக்கு மான உரையாடல் களமாக அமைய வேண்டும்.

## நோன்புப் பெருநாள்

ரமளான் முதல் பிறையில் தொடங்கும் நோன்பு இறுதிப் பிறையில் நிறைவடைகிறது. பிறை தென்பட்டதும் நோன்புப் பெருநாள் தொடங்கிவிடுகிறது. மாதம் முழுவதும் நோன்பு நோற்று மகத்தான பயிற்சியில் ஈடு பட்ட முஸ்லிம்கள் நோன்பை நிறைவு செய்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு பெருநாளைக் கொண்டாடுகிறார்கள்.

பெருநாள் அதிகாலையில் எழுந்து குளித்து, புத்தாடை அணிந்து, பித்ரா எனும் பெருநாள் தர்மத்தைக் கொடுத்து விட்டு பள்ளிவாசலுக்கோ, திடலுக்கோ சென்று இறைவனைப் புகழ்ந்து அவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் பெருநாள் தொழு கையைத் தொழுவார்கள். அங்கு நிகழ்த்தப் படும் உரையைக் கேட்பார்கள். தான தர்மம் வழங்குவார்கள். ஒருவரை ஒருவர் ஆரத் தழுவி அன்பு பாராட்டுவார்கள். இறைவன் மிகப் பெரியவன் (அல்லாஹு அக்பர்) என்று இறைவனின் புகழ் பாடுவார்கள்.

## ஈத் மிலன்

முஸ்லிம்கள் தாங்கள் மாதம் முழுவதும் பசித்திருந்து நோன்பு நோற்று பெருநாள் கொண்டாடினாலும் சகோதர சமுதாயச் சொந்தங்களுடன் இந்த மகிழ்வையும், அன்பையும் பரிமாறிக் கொள்ளும் ஓர் அழகிய சமய நல்லிணக்க நிகழ்வே ஈத்மிலன் எனும் பெருநாள் சந்திப்பு நிகழ்வுகள். இந்த நிகழ்வில் சகோதர சமுதாயச் சொந்தங்களை அழைத்து கருத்துகளையும், விருந்தையும் பரிமாறி மகிழ்வர்.

இந்தப் பெருநாள் சந்திப்பு நிகழ்வுகள் ஒவ்வொரு பள்ளிவாசல் தோறும் நடைபெற வேண்டும். பள்ளிவாசலைச் சுற்றி இருக்கின்ற சகோதர சமுதாயச் சொந்தங்களை அழைத்து உரையாட வேண்டும். இந்த உரையாடலும், ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளும் கருத்துப் பரிமாற்றமும் வெறுப்பைக் குறைத்து அன் பையும், புரிதலையும் ஏற்படுத்தும்.

இந்தப் பெருநாள் சந்திப்பு நிகழ்வுகள் பெருக வேண்டும். அன்பும் மகிழ்வும் திளைக்க வேண்டும். **அனைவருக்கும் ஈகைத் திரு நாளாம் நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகள்.**


Press & Registration of Books Act Registration of Newspaper (Chennai) Rules 1956 Form IV (See Rule 8) Statements About Ownership & other Particulars about News Paper.

| | | |
|---|---|---|
| Place of Publication | : | 138, Perambur High Road Chennai -12 |
| Periodicityof Its publication | : | Fortnightly |
| Printer's Name | : | S. Rajan |
| Nationality | : | Indian |
| Address | : | Bharani Offset Printers, 77, Venkatathri Street, Kosapet, Chennai - 12. |
| Publisher's Name | : | H. Abdur Raqeeb |
| Nationality | : | Indian |
| Address | : | 138, Perambur High Road, Chennai -12 |
| Editor's Name | : | H. Abdur Raqeeb |
| Nationality | : | Indian |
| Address | : | 138, Perambur High Road, Chennai -12 |
| Owner's Name(s) | : | Creative Communication Chennai |
| a) Please State the Particulars of individuals or of the firm, joint stock company, Trust, Co-operative society or Association which owns the news paper | : | Trust - represented by its Chairman |

I, H. Abdur Raqeeb here by declare that the Particulars given are true to the best of my knowledge and belief.

Dated : 28-02-2026

(sd) **H. Abdur Raqeeb**
Signature of Publisher

மதரஸா-யே-இம்தாதியா (பார்வையற்றோர்களுக்காக)

# MADRASA-E-IMDADIYA FOR THE BLIND

No.31, New no.61, Kattakadai Street, Melvisharam - 632509





அல்ஹம்துலில்லாஹ் 2010-ம் ஆண்டு மக்தப் ஆக தொடங்கிய நமது நிறுவனம் படிபடியாக வளர்ச்சி அடைந்து தற்போது நாழிரா, ஹிப்ழு, ஜூம்ரா மற்றும் கிராத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மதரஸாவில் 120 மாணவர்கள் ஓதி வருகின்றனர். (இதில் 40 மாணவர்கள் பார்வையற்றவர்கள்). இதுவரை சுமார் 39 மாணவர்கள் 10-ம் வகுப்பு மற்றும் 13 மாணவர்கள் கல்லூரி பட்டபடிப்பு முடித்துள்ளனர்.

ரஸ்மே உஸ்மானி அடிப்படையில் பிரைலி குர்ஆனை தயார் செய்து இந்திய மற்றும் சர்வதேச அளவில் 1200 பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு பிரதி பிரைலி குர்ஆன் தயாராவதில் ரூ.2000/- செலவாகிறது.

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையாலும் மக்களின் நன்கொடையை கொண்டும் மாணவர்களின் தேவைகள் (கல்வி, உறைவிடம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம், உணவு, மருத்துவம், போக்குவரத்து செலவு, உடை போன்றவை) அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றது.

பிரைலி குர்ஆனின் செலவு **₹2,000**

## TOTAL STUDENTS

**100** Boy's Students (Blind's 40)

**150** Girl's Students (Blind's 10)

**153** Hafiz Graduates (Blind's 15)

**28** Aalim Graduates (Blind's 09)

| ஆண்கள் மதரஸாவின் செலவினங்கள் | |
|---|---|
| ஒரு மானவனின் மாதாந்திர செலவு | 5,000 |
| ஒரு மாணவனின் வருடாந்திர செலவு | 60,000 |
| மதரஸாவின் மாதாந்திர செலவு | 9,00,000 |
| மதரஸாவின் வருடாந்திர செலவு | 1,08,00,000 |

**+91-9952120340**



## WAYS TO DONATE

State Bank of India
THE BANKER TO EVERY INDIAN

**Name** : Imdadiya Educational and Charitable Trust
**A/C No** : 35612371063 **IFSC** : SBIN0003783
**UPI ID** : imdadiyaeducationalct@sbi

इंडियन बैंक Indian Bank

**Name** : Imdadiya Educational and Charitable Trust
**A/C No** : 6288904753 **IFSC** : IDIB000M139
**UPI ID** : imadadiya@indianbnk

## SCAN AND PAY

BHIM UPI
BHARAT INTERFACE FOR MONEY | UNIFIED PAYMENTS INTERFACE

# மதரஸா-யே-இம்தாதியா தாஃலீமுல் பனாத்

## ஒரு பெண் கல்வி கற்றால், ஒரு தலைமுறையே கல்வி கற்றது போன்றதாகும்



மதரஸா-யே-இம்தாதியா தாஃலீமுல் பனாத், மேல்விஷாரம் பெண்களுக்கு மார்க்கக் கல்வியை வழங்கும் நோக்கில் கடந்த 2012-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ் மதரஸா ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சி அடைந்து வருகிறது. 2014-ம் ஆண்டு ஹிப்ழு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 2016-17ம் ஆண்டிலிருந்து ஹிப்ழு பிரிவு மாணவிகளுக்காக விடுதி வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டது. 2022-ம் ஆண்டிலிருந்து 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு இலவச தையல் பயிற்சியுடன் நாழிரா பிரிவும், 15 வயதிற்கு மேற்பட்ட மாணவிகளுக்கு உலகக் கல்வியுடன் 3 வருட முபல்லிஹா பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது.

2025-ம் ஆண்டு வரை, 113 மாணவிகள் ஹாபிழா ஆகியுள்ளனர். 80-க்கும் மேற்பட்ட மாணவிகள் நாழிரா ஓதியுள்ளனர் மற்றும் எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் (3 பார்வையற்ற மாணவிகள் உட்பட) தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாணவிகளின் கல்வி நலனுக்காக தங்கள் ஸதகா, ஜகாத் மற்றும் நன்கொடைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பெண்கள் மதரஸாவின் செலவினங்கள்**

| | |
|---|---|
| ஒரு மாணவியின் மாதாந்திர செலவு | 5,000 |
| ஒரு மாணவியின் வருடாந்திர செலவு | 60,000 |
| மதரஸாவின் மாதாந்திர செலவு | 3,00,000 |
| மதரஸாவின் வருடாந்திர செலவு | 36,00,000 |

G Pay BUSINESS **+91-9080241203**

## WAYS TO DONATE

**Name** : Ain Educational and Charitable Trust

**A/C No** : 38940876861 **IFSC** : SBIN0003783

**UPI ID** : aineducationaltrust@sbi

**SCAN AND PAY**

BHIM | UPI

*Address :*

*12/15, Appapillai Street,*

*Melvisharam - 632509*

**Branch of Madrasa-E-Imdadiya for the Blind, Melvisharam**



**‘இந்த ஆண்டின் ரமளான் மாதத்தையாவது நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்’ என்று நாம் எவ்வளவுதான் உறுதியான முடிவு எடுத்தாலும், ‘இந்த ஆண்டின் ரமளான் மாதத்தின் கடமைகளையும் வழிபாடுகளையும் எப்பாடுபட்டாவது செயல்படுத்தி விட வேண்டும்’ என்று எவ்வளவுதான் முயற்சி செய்தாலும்..**

# ரமளானும் 3 கேள்விகளும்

மௌலவி M.M. முஹம்மத் இஸ்மாயீல் இம்தாதி

நம்மால் மாதத்தின் இறுதி வரையில் அதற்குச் செயல் வடிவம் கொடுக்க முடிவதில்லையே. ஏன்? அப்படியே செயல்படுத்தினாலும் அந்தச் செயல்பாட்டின் மூலம் குறிப்பிட்டுச் சொல்லும் படியான மாற்றம் ஏதும் நம்மிடம் வந்ததாகத் தெரியவில்லையே ஏன்? அப்படியே ஏதேனும் மாற்றம் வந்திருந்தாலும் அதற்கான முழு பிரதிபலன் கிடைக்குமா என்று தெரியவில்லையே, ஏன்?

இந்த மூன்று ‘ஏன்?’ களுக்கும் விடையைத் தெரிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

ரமளானின் எந்த ஒரு கடமைக்கும் செயல் வடிவம் கொடுப்பதற்கும், அந்தச் செயல்பாட்டின் மூலம் நம் வாழ்வில் மாற்றம் ஏற்படுவதற்கும், அந்த மாற்றத்திற்கான பிரதிபலன் முழுமையாக நமக்குக் கிடைப்பதற்கும் நாம் சில வேலைகளைச் செய்தாக வேண்டும். அதற்காக நம்மிடம் சில அடிப்படையான குணங்கள் இருக்க வேண்டும்.

1. ரமளானை நான்கு வகையில் பயன்படுத்த வேண்டும்.
2. நமது வழிபாடுகளால் பெருமிதம் கொள்ளாமல் இருக்க வேண்டும்.
3. நமது நற்செயல்களை ஏற்றுக்கொள்ளுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

### 1. ரமளானின் நான்கு வகைப் பயன்பாடு

- ரமளானின் சிறப்புகளைப் புரிந்து கொண்டு, மகிழ்ச்சியுடன் அதனை எதிர் கொள்வது.
- ரமளானின் எல்லாக் கடமைகளையும் முடிந்தவரை நிறைவேற்ற முயற்சி செய்வது.
- ரமளானின் நன்மைகளைத் தடுத்து விடுகின்ற தீமைகள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பது.
- குற்றங்கள் பாவங்கள் தவறுகள் பற்றிய சுய விசாரணை செய்வது.

### *ரமளானை மகிழ்ச்சியோடு எதிர் கொள்வது*

அல்லாஹ் தனது அடியார்களுக்கு வழங்கியுள்ள கருணையின் காலம்தான் புனிதமான ரமளான் மாதம்! பாவங்களைச் சுட்டெரிக்கக்கூடிய அருள்மிகு ரமளான் நம்மிடம் வந்திருக்கிறது என்கிற போது நமது உள்ளங்கள் மகிழ்ச்சியால் பூரித்துப் போக வேண்டும். மகிழ்வு கட்டுக்கடங்காமல் அலை பாய வேண்டும். பொதுவாக ரமளான் மாதம்

வந்து விட்டால் சின்னஞ்சிறு பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் ஒரு வகை குதூகலம் ஏற்படுகிறது.

இப்படி, அடியார்களின் மகிழ்ச்சியே அளவிட முடிவதில்லை என்றால் ரஹ்மானின் கருணையை அளவிட முடியுமா? அன்பாளனான அல்லாஹ்வின் அருளுக்கு எல்லையில்லை. ரமளானின் கண்ணியம் மகத்துவம் சிறப்புகளைக் குறித்து அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) அவர்கள் மிகத் தெளிவாக விவரிக்கிறார்கள்.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நிச்சயமாக சுவனத்தில் ஒரு வாசல் உண்டு. அதற்கு 'ரய்யான்' என்று பெயர் சொல்லப்படும். மறுமை நாளில் அதன் வழியாக நோன்பாளிகள் நுழைவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில்: 'நோன்பாளிகள் எங்கே?' என்று கேட்கப்படும். அப்போது அவர்கள் எழு(ந்து செல்)வர். அவர்களைத் தவிர வேறு யாரும் அதில் நுழைய மாட்டார்கள். அவர்கள் அதில் நுழைந்து விட்டால் அந்த வாசல் மூடப்பட்டு விடும். பிறகு எவரும் அதில் நுழைய முடியாது'
**அறிவிப்பாளர் : ஸஹ்ல்(ரலி) நூல் : புகாரி**

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ரமளானின் முதல் நாள் இரவு வந்து விட்டால் ஷைத்தான்களும் மூர்க்கத்தனம் கொண்ட ஜின்களும் விலங்கிடப்படுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டு விடுகின்றன. அதன் எந்த வாசல்களும் திறக்கப்படாது. சுவனத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. அதன் எந்த வாசல்களும் அடைக்கப்படாது. (ரமளானின் முதல் நாளில்) ஓர் அழைப்பாளர் : 'நன்மைகளில் ஆர்வம் கொள்பவனே, முந்திச் செல்வாயாக! தீமைகளில் ஆர்வம் கொள்பவனே, குறைத்துக் கொள்! என்று அழைப்புவிடுத்துக் கூறுவார். நரகத்திலிருந்து விடுவிக்கப்படுபவர்கள் உள்ளனர். இது ரமளானின் ஒவ்வொரு நாளிலும் நடைபெறும்.' **அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா(ரலி) நூல் : திர்மிதி, இப்னுமாஜா.**

இந்த நபிமொழிகள் ஒரு விஷயத்தைத் தெளிவாக உணர்த்துகின்றன. நாம் மனதார விரும்பும் விருந்தாளியை அன்புடன் கட்டித் தழுவி வரவேற்பதில் காண்பிக்கும் மகிழ்ச்சியை விட கருணையாளனான அல்லாஹ் தன் அடியார்களை தனது அருளால் மூடிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றான்.

### ரமளானின் எல்லாக் கடமைகளையும் முடிந்தவரை நிறைவேற்ற முயற்சிப்பது

ரமளானை நன்மைகளைத் தேடிக் கொள்ளும் பாக்கியமாகக் கருத வேண்டும். இத்தகைய பாக்கியத்தை முழுமையாக அடைந்திட வாய்ப்பு கிடைக்க வேண்டுமே என்ற எதிர்பார்ப்பில் செயல்படவும் வேண்டும். ஏதோ ரமளான் மாதம் வந்தது; நானும் நோன்பு வைத்தேன் என்றில்லாமல் நோன்பு வைப்பதோடு,

- ஐந்து நேரத் தொழுகைகளை அதனதன் நேரத்திலேயே நிறைவேற்றுவது,
- இரவுத்தொழுகையில் கலந்து கொள்வது,
- திருக்குர்ஆன் ஓதுவது, அதனை ஓதக் கேட்பது,
- அதன் மொழிபெயர்ப்பை வாசிப்பது,
- அதன் கருத்துகளை விளங்கிக் கொள்ள முயற்சி செய்வது,
- அதனை தன்னுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முயற்சிப்பது,
- தான தர்மங்கள் செய்வது,
- ஒற்றைப்படை இரவுகளைப் பயன்படுத்துவது,
- அதிகமாகப் பாவமன்னிப்புக் கேட்பது,
- நோன்பாளிகளுக்கு நோன்பு துறக்க ஏற்பாடு செய்வது,
- ஒரு சிலருக்காவது சஹர் உணவு கொடுக்க முயற்சிப்பது,
- எல்லோருடனும் அடக்கத்தோடு, சகிப்புத் தன்மையோடு நடந்து கொள்வது

என்று ஒருவர் நினைத்தால் ஏராளமான நன்மைகளைப் பெற்றுக் கொள்கிற நற்செயல்களைச் செய்யலாம்.

## *தீமைகள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பது*

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் கூறுகின்றான் : 'ஆதத்தின் மகனின் செயல்கள் அனைத்தும் அவனுக்குரியதே ஆகும்; நோன்பைத்தவிர! ஏனெனில் அது எனக்குரியதாகும். அதற்குரிய கூலியை நானே வழங்குவேன். (அல்லது அதற்குரிய கூலி நானேயாவேன்) நோன்பு ஒரு கேடயமாகும். எனவே உங்களில் ஒருவர் நோன்பு இருந்தால் அவர் தீயவற்றைச் செய்ய வேண்டாம். கூச்சலிடவோ சண்டையிடவோ வேண்டாம். எவரேனும் ஏசினால் அல்லது சண்டையிட்டால் 'நான் நோன்பாளி' என்று சொல்லி (ஒதுங்கி) விடட்டும். **அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நூல் : புகாரி**

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எவர் ஒருவர் நோன்பு வைத்திருந்தும் பொய் சொல்வதையும் பொய்யான நடவடிக்கைகளையும் விட்டு விடவில்லையோ அவர் வெறுமனே பசித்திருப்பதிலும் தாகித்திருப்பதிலும் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை.' **அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி) நூல் : புகாரி**

## *தவறுகள் பற்றிய சுய விசாரணை செய்வது*

நம்முடைய வாழ்க்கையில் நாம் தெரிந்தோ தெரியாமலோ, சுயமாகவோ, அல்லது மற்றவர்களின் தூண்டுதல்களினாலோ நிறைய பாவங்களைச் செய்திருக்கலாம். நமது வாழ்க்கையில் பெருகிக் கிடக்கின்ற எல்லாவிதமான பாவங்கள், குற்றங்கள், தவறுகளையும் விட்டு நாம் விலகி விட வேண்டும் என்பதற்காகத்தான் ரமளான் மாதம் நம்மிடம் வருகை தருகிறது.

ரமளான் என்கிற இறையற்புதம் நம்மிடம் வந்த பிறகு தனது தவறுகள் குற்றங்களிலிருந்து விலகி விடுவதுதான் உண்மையான இறைநம்பிக்கையாளனின் நிலையாக இருக்க வேண்டும்.

எனவே, ரமளான் மாதத்தில் அதனுடைய வழிபாடுகளையும் கடமைகளையும் நிறைவேற்றுகின்ற அதே நேரத்தில் நம்மிடம் இருக்கின்ற பெரிய பெரிய குற்றங்கள் பாவங்கள் முதல், சின்னச்சின்ன தவறுகள், பிழைகள், குறைபாடுகள், பலவீனங்கள் வரை என்னவெல்லாம் இருக்கின்றன என்று பட்டியல் போட்டு அவற்றில் ஒவ்வொன்றாகத் தவிர்த்துக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். ரமளானின் இறுதி நாள்களில் 'எத்தனை குற்றங்களிலிருந்து நாம் விடுபட்டிருக்கிறோம்?' என்று சிந்திக்கவும் வேண்டும்.

## 2. வழிபாடுகளால் பெருமிதம் கொள்ளாதிருத்தல்

நபி இப்ராஹீம்(அலை) அவர்களை இறைவன் உற்ற தோழராக அறிவிக்கின்றான். அவர்கள் நின்று தொழுத இடத்தை முஸ்லிம்கள் தொழும் இடமாக்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் மகனைப் பலியிட முன்வந்த தியாகத்தைப் போற்றும் வகையில் நாம் ஆடு, மாடு, ஒட்டகங்களைப் பலியிட வேண்டும். இவ்வாறு பல சிறப்புகளை அல்லாஹ் இப்ராஹீம்(அலை) அவர்களுக்கு வழங்கியிருக்கின்றான்.

இந்தப் பெருமைகளுக்கெல்லாம் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் எவ்வளவு பெருமிதம் கொண்டிருக்க வேண்டும்? ஆனால், இவ்வளவு புகழாரமும், உயர்ந்த மரியாதையும் பெற்றிருந்தும் கூட கொஞ்சம் கூட அகந்தை கொண்டு விடாமல் ஒரு நாள் அல்லாஹ்விடம் அவர்கள் செய்த முறையீட்டை உலகம் உள்ளளவும் இருக்கக்கூடிய குர்ஆனில் அல்லாஹ் பதிவு செய்து வைத்திருக்கின்றான்.

'மேலும், மனிதர்கள் அனைவரும் உயிர் கொடுக்கப்பட்டு எழுப்பப்படும் நாளில் என்னை இழிவு படுத்தி விடாதே! அந்நாளில் செல்வமும் பிள்ளைகளும் எவ்விதப் பயனும் அளித்திட மாட்டா.' (திருக்குர்ஆன் 26:87,88)

எவ்வளவுதான் உயர் பதவியடைந்தாலும் உலகத்தின் பார்வையில் உயர்ந்த செல்வத்தையும் செல்வாக்கையும் எவ்வளவுதான் பெற்றிருந்தாலும் தன்னையும் இறை

வனையும் மறந்து நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் தனது நற்செயல்களின் மூலம் துளி யளவு கூட பெருமிதம் கொள்ளாமல் இருந் திருப்பதைத்தான் அவர்கள் செய்த பிரார்த் தனையிலிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம்.

தம் வாழ்க்கையையே அல்லாஹ்விற்காக அர்ப்பணித்து விட்டு இறைவனை நெருங் கிய இறைத்தூதர் நபி இப்ராஹீம்(அலை) அவர்களே மறுமையில் ‘தான் அவமானத் துக்கும் கேவலத்துக்கும் ஆளாகி விடக் கூடாது’ என்று பதை பதைக்கும் உள்ளத் தோடு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய் திருக்கின்றார்கள் என்றால்.., நாம் நம்மையும் நம்முடைய அமல்களையும் கொஞ்சம் சிந்தனை செய்து பார்ப்போம்.

### 3. நம் நற்செயல்கள் ஏற்றுக் கொள்ள பிரார்த்தனை செய்ய வேண்டும்

நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் மாபெ ரும் தியாகங்களைச் செய்தவர்கள். இறை யில்லம் கஅபாவை மறுகட்டமைப்புச் செய்தவர்கள். ஹாஜிகளின் கூலியில் நிச்சயம் இப்ராஹீம் நபிக்கு ஒரு பங்கு இருக்கும். இவ்வளவு பெரிய இபாதத்தை நிறைவேற்றியிருந்தும் அதற்கான கூலி நிச்சயம் நமக்குக் கிடைத்து விடும் என்று அவர்கள் வெறுமனே இருந்திடவில்லை. நபி இப்ராஹீம்(அலை) அவர்களும் நபி இஸ் மாயீல்(அலை) அவர்களும் கஅபாவின் சுவர் களை உயர்த்திக் கட்டி விட்டு துஆச் செய் ததை அல்லாஹ் நினைவு கூரும்படி கூறு கின்றான் :

‘மேலும் நினைவுகூருங்கள்: இப்ராஹீ மும் இஸ்மாயீலும் அவ் வீட்டின் சுவர்களை உயர்த்திக் கொண்டிருந்த பொழுது இவ்வாறு பிரார்த்தித்தார்கள்: எங்கள் இறைவனே! எங்களுடைய இப்பணியை ஏற்றுக் கொள் வாயாக! நிச்சயமாக நீதான் எல்லாவற்றையும் செவியேற்பவனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றாய்’ (திருக்குர்ஆன் 2 :127)

இது குறித்து இப்னு அபீ ஹாத்தம் என்ப வர் ஒரு செய்தியைத் தருகின்றார். வுஹைப் இப்னுல் வர்த் இந்த வசனத்தை ஓதி விட்டு இவ்வாறு கூறியவாறு அழுவார் : ‘ரஹ்மானின் நண்பரே! நீங்கள் அல்லாஹ்வின் இல்லத்தின் சுவர்களையே கட்டியெழுப்பியுள்ளீர்கள். இருந்தும் அது ஏற்றுக்கொள்ளப்படாமல் போய் விடுமோ என்று அஞ்சியுள்ளீர்களே!’

தஃப்ஸீர் இப்னு கஸீர் இதனைக் கூறிவிட்டு அவர் தொடர்கிறார்: ‘ஏகத்துவத்தின் முன்னோடிகளாகிய அந்தத் தலைவர்களின் நிலையே இதுதான் என்றால் அவர்களல்லாத மற்றவரின் நிலையினை என்னவென்பது?’

எனவே நாம் இபாதத்துகள் செய்வதோடு மட்டுமின்றி அவை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று பிரார்த்தனை புரிய வேண்டும்.

இந்தப் புனிதமான ரமளான் மாதத்தில் அல்லாஹ் நமது குறைகளையெல்லாம் மன்னித்து நமது நற்செயல்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, இம்மையிலும் மறுமையிலும் மகத்தான கூலியைத் தந்தருள்வானாக!





- **இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.**
- **இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்**
- **இது ஓர் அஞ்சல் வழி நூலகம்**

**உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.**

**இஸ்லாமிக் அகாடமி**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

In the Name of Allah　Regd. No. 667 / 2010

# DHARUL ILM HELPING HANDS

## HELPING ORPHANED & POOR CHILDREN

Assalamu Alaikkum

## LENDING HANDS TO SUPPORT ORPHAN!

Messenger of Allah ( PBUH ) said, " I will be like this in Jannah with the person who takes care of an Orphan". Messenger of Allah (PBUH) raised his forefinger and middle finger by way of illustration. ( Al-Bukhari )

We initiated this service in 2010 with 10 orphan kids who were residing in rural locals across Chennai.

While kids will be under the supervision of their respective guardians, we will bear their expenses for schooling with uniform/books, monthly provision & other medical expenses etc..,

With the grace of Allah and support from many ummahs, we have grown and Now helping More than 160 Orphan children and the intention is to grow and cover as much as possible to support our society and ensure our Dheen is prolonged. Alhamdulillah!!

Unfortunately, the requirements of the local situation demand additional expenses. We urge you to come forward and contribute wholeheartedly to this noble cause to grant a place in Jannah. Inshaa Allah!!

**EXPENSES FOR A CHILD Per Month ₹ 3000/- Per Year ₹ 36000/-**







Send your Zakkat and Sadakaa by Cheque or D.D. favoring

"DHARUL ILM HELPING HANDS"
INDIAN OVERSEAS BANK
A/c No. : 014202000006786
IFSC CODE - IOBA0000142,
OLD WASHERMENPET BRANCH, CHENNAI.

G Pay
93429 03787

Our Trust does not have FCRA. Our Trust does not receive foreign aid as per Goverment of India Act. So don't do money transactions from abroad.

**Your Donations are exempted from Income Tax. Dep. U/S 80G**

No. 64, Parthasarathy Street, Old Washermenpet, Chennai-600 021.
Cont : 98407 25020 / 96000 55060
Web : www.dharulilmhh.com E-mail : dharulilmhh@gmail.com : @dharulilm

இறைவனின் திருப்பெயரால்... Regd. No. 667 / 2010

# தாருல் இல்ம் உதவும் கரங்கள்

## HELPING ORPHANED & POOR CHILDREN

அஸ்ஸலாமு அலைக்கும்

**நீங்கள் அநாதை குழந்தைகளை ஆதரிக்க விரும்புகிறீர்களா?**

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் நானும் அநாதையை ஆதரிப்பவனும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம் என்று தனது ஆட்காட்டி விரலையும், நடு விரலையும் சுட்டிக்காட்டி இருவிரல்களும் எவ்வாறு அடுத்தடுத்து இருக்கின்றனவோ அவ்வாறு நெருக்கமாக இருப்போம் என்று கூறினார்கள்.** (நூல்கள் புகாரி, முஸ்லிம்)

தந்தையை இழந்து, தரமான உணவின்றி, நல்ல உடைகளின்றி, சரியான வழிகாட்டுதலின்றி, அநாதைகளாக வாழும் இந்த குழந்தைகளுக்கு உதவும் கரங்கள்தான் "தாருல் இல்ம் உதவும் கரங்கள்".

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையினால் 2010-ல் 10 குழந்தைகள் என்று ஆரம்பிக்கப்பட்ட இந்த உதவும் கரங்கள் (டிரஸ்ட்) இன்று சமூகத்தில் கவனிப்பார் அற்று அதிகரித்துவரும் அநாதை குழந்தைகளை கருத்தில் கொண்டு தற்போது 160 குழந்தைகளுக்கு மேல் பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!!

குழந்தைகள் அவரவர்கள் பொறுப்பாளர்களுடன் அவர்கள் இல்லங்களிலேயே பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். குழந்தைகளுக்கு ஒவ்வொரு மாதமும் தேவையான அரிசி, மளிகை பொருட்கள், வருடத்திற்கு மூன்று முறை ஆடைகள், கல்விக்கட்டணம் மற்றும் பள்ளிச்சீருடைகள் ஆகிய அனைத்து தேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

**இவர்களின் கண்ணீரை துடைத்திட, இந்த உதவிகள் தொடர்ந்திட தாராளமாக உதவுங்கள்.**

**ஒரு குழந்தைக்கு ஆகும் செலவு மாதத்திற்கு ₹ 3000/- வருடத்திற்கு ₹ 36000/-**



உங்கள் ஜகாத் மற்றும் ஸதகாவை பணம் / காசோலை அல்லது D.D.யாகவோ கீழ்கண்ட பெயருக்கு அனுப்பவும்

"DHARUL ILM HELPING HANDS"
INDIAN OVERSEAS BANK
A/c No. : 01420200006786
IFSC CODE - IOBA0000142,
OLD WASHERMENPET BRANCH, CHENNAI.

G Pay
93429 03787

எங்கள் அறக்கட்டளைக்கு FCRA இல்லை. இந்திய அரசின் சட்டத்தின்படி எங்கள் அறக்கட்டளை எந்த வெளிநாட்டு உதவியையும் பெறுவதில்லை. எனவே வெளிநாட்டில் இருந்து பண பரிவர்த்தனை செய்ய வேண்டாம்.

**Your Donations are exempted from Income Tax. Dep. U/S 80G**

எண்.64, பார்த்தசாரதி தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 021.
தொடர்புக்கு : 98407 25020 / 96000 55060
Web : www.dharulilmhh.com E-mail : dharulilmhh@gmail.com : @dharulilm

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ...

المدرسة الجنة ودارالأيتام

Regd. No. : 28/BK IV/15

# அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா

## தேவாரம் - 625 530. தேனி மாவட்டம்.

பேரன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

## அன்பான வேண்டுகோள் ...

தேனி மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வரும் நமது அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸாவில் 50-க்கும் மேற்பட்ட எத்தீம் மற்றும் ஏழை மாணவிகள் ஈருலக நற்கல்வி பயின்று வருகிறார்கள். முழுமையான மார்க்க கல்வியுடன் பள்ளி, கல்லூரிகளிலும் பயின்று வருகிறார்கள். எத்தீம்களைப் பராமரிக்கும் இந்த அறப்பணிக்கு மாதந்தோறும் சுமார் ரூ. 3,00,000/- வரை செலவாகிறது. அவர்களின் கல்விக்கும், மதரஸாவின் பல்வேறு அறப்பணிகளுக்கும் தங்களது ஜகாத்/ஸதகா-வை வழங்கி உதவிடுமாறு மிக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(பயபக்தியுடைய) அவர்கள் (எத்தகையோரென்றால்)
அல்லாஹ்வின் மீதுள்ள அன்பினால்
ஏழைகளுக்கும், எத்தீம்களுக்கும்,
சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள்.
அல்-குர்ஆன் - 76:8





G-Pay 87542 22470

இன்ஷா அல்லாஹ்! வங்கியில் பணம் செலுத்திய பின் மதரஸாவிற்கு தகவல் தெரிவிக்கவும்.

தங்களது **ஜகாத் / ஸதகா** போன்ற உதவிகளை அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா எனும் பெயருக்கு DD/ செக் மூலமாக கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி எத்தீம்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வங்கி விபரம்**

AL JANNATH YATHEEMKHANA MADRASA
A/C No : 35486597490 State Bank of India
Thevaram Branch, IFS Code : SBIN0014441

C.அபூபக்கர் சித்தீக் தஃவத்தி, D.T.T., நிர்வாகி
**அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா**
27/2, W-17, 5-வது தெரு, தேவாரம் - 625 530

தொடர்புக்கு
99443 77681
99448 70889
04554-254021


بسم الله الرحمن الرحيم
உங்கள் இல்லங்களிலும், இறை இல்லங்களிலும்
ஓர் இஸ்லாமிய நூலகம்!
புனித ரமலான்
மாதத்தை முன்னிட்டு
அனைத்து நூல்களும் சிறப்பு தள்ளுபடி விலையில்!
*terms & Conditions apply
94440 25000
95000 57860
ரஹ்மத் பதிப்பகம்
இது ஒரு சென்னை ரஹ்மத் அறக்கட்டளை நிறுவனம்
6, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி காலனி, மயிலாப்பூர், சென்னை 4
BHIM UPI

# ஏழைகளை ஜகாத் மூலம் செல்வந்தர்களாக்கும்

# 10 அம்சத் திட்டங்கள்

**- H. அப்துர் ரகீப்**
பொதுச் செயலாளர், இந்திய இஸ்லாமிய நிதி மையம்(ICIF)

தமிழில்: **மௌலவி சமியுல்லாஹ் உமரி**

கடந்த இதழ்த் தொடர்ச்சி..

### 1. ஜகாத் பற்றிய விழிப்பு உணர்வு, நிபுணர்களின் பங்கேற்பு

நபிகள் நாயகம்(ஸல்), குலஃபாயே ராஷிதீன்களின் காலத்தில் இருந்த ஜகாத் கூட்டு விநியோகம் குறித்த விழிப்பு உணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். மார்க்க அறிஞர்கள் மட்டுமின்றி தொழில்முறை திறன்களைக் கொண்ட ஆண்களும் பெண்களும் இந்த அமைப்பின் நிர்வாகத்தில் ஈடுபட வேண்டும்.

உதாரணமாக நவீன நிபுணர்கள், கணக்காளர்கள், தணிக்கையாளர்கள், சிறந்த மக்கள் தொடர்புத் திறன் கொண்ட சமூகப் பணியாளர்கள் இந்தப் பணிகளில் ஈடுபட வேண்டும். இந்தப் பணிகள் ஒவ்வொரு மஹல்லா அளவிலும் தொடங்க வேண்டும்.

முஸ்லிம் நிபுணர்கள் சங்கம் நடத்திய ஜகாத் கணக்கெடுப்பு, பின்வரும் உண்மைகளை வெளிப்படுத்தியது: ஜகாத் செலுத்துபவர்களில் சுமார் 30 விழுக்காட்டினர் ஜகாத், அதன் பயன்கள் குறித்து எதுவும் அறியாதவர்கள். 40 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் ஜகாத்தைச் சரியாகக் கணக்கிடத் தெரியாதவர்கள். 75 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் தங்கள் ஜகாத்தை உறவினர்கள் அல்லது உள்ளூரிலுள்ள தேவையுள்ளவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் வழங்குபவர்கள்.

15% விழுக்காட்டினர் மட்டுமே பைத்துல்மால், அரசு சாரா ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஜகாத்தை வழங்குகிறார்கள். இருப்பினும் 70 விழுக்காட்டிற்கும் அதிகமானோர், ‘கூட்டு ஜகாத் முறைதான் சிறந்தது; அது கல்வி, பொருளாதார சுதந்திரத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்’ என்று ஒப்புக்கொண்டனர்.

அதேபோல் ஜகாத்தின் நிசாப் குறித்து சரியான விழிப்பு உணர்வும் இல்லை. 200 திர்ஹம் வெள்ளி (அல்லது 595 கிராம் வெள்ளி) 20 தீனார் தங்கம் (அல்லது 87 கிராம் தங்கம்) (ஹுஜ்ஜத்துல்லா அல்-பாலிகா, தொகுதி 2, பக்கம் 506)

நிசாப் அளவை அடையாத ஒவ்வொருவரும் ஏழை எனக் கருதப்படுகின்றனர். ஷா வலியுல்லாஹ்(ரஹ்), நிசாபின் நோக்கத்தை விளக்கும்போது, ‘இது ஒரு சிறிய குடும்பத்தின் ஓராண்டு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய சொத்து’ என்று குறிப்பிடுகிறார். (ஹுஜ்ஜத்துல்லா அல்-பாலிகா, தொகுதி 2, பக்கம் 66)

### 2. நிதி அறிவு, செல்வ உருவாக்கம்

மக்களிடையே நிதி, கல்வியறிவு இல்லாதது மிகப்பெரிய குறைபாடாகும். செல்வ உருவாக்கம், வணிகத்தில் பங்கேற்பு, லாபகரமான வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க வேண்டும். சேமிப்பு, முதலீடு செய்வதற்கான பழக்கத்தை வளர்த்து, ஒரு வலுவான

கொடுக்கும் சமூகத்தை உருவாக்க வேண்டும். சொர்க்கத்தின் நற்செய்தி அறிவிக்கப்பட்ட பத்து உன்னதத் தோழர்களில் உஸ்மான்(ரலி), அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப்(ரலி), ஜுபைர் பின் அவ்வாம்(ரலி), தல்ஹா பின் உபை துல்லாஹ்(ரலி) ஆகிய நால்வரும் இன்றைய அளவுகோலின்படி கோடீஸ்வரர்களாக இருந்தனர்.

### 3. மதரஸாக்களின் பாடத்திட்டத்தில் ஜகாத் குறித்த நவீன பாடத்திட்டம் தேவை

ஜகாத் கூட்டு இயக்கத்தை அறிஞர்களே வழிநடத்த வேண்டும். அதற்காக, மதரஸாக் களின் பாடத்திட்டத்தில் ஜகாத் ஒரு தனியான, விரிவான பாடமாக சேர்க்கப்பட வேண்டும்.

சமூக, பொருளாதார மதிப்பீடுகள், தேவை யுள்ளவர்களின் நிலை அறிதல் போன்ற நடைமுறை களப்பணிகளும் கட்டாயமாக நடைபெற வேண்டும். ஜகாத் முறையைச் சிறப்பாகச் செயல்படுத்த இஸ்லாமிய ஃபிக்ஹ் அறிவுடன் மட்டுமல்லாமல் உளவியல், மக்கள் தொடர்பு, கணக்கியல், தணிக்கை, நிதி மேலாண்மை ஆகிய துறை களில் நிபுணத்துவமும் அவசியமாகிறது. இதற்காக இஸ்லாமிய ஃபிக்ஹ் அகாடமி போன்ற நிறுவனங்கள், உலக ஜகாத் கவுன் சில் போன்ற அமைப்புகளின் ஒத்துழைப் புடன் ஒரு முழுமையான செயல் திட்டத் தைத் தயாரிக்க வேண்டும்.

டாக்டர் உபைதுல்லாஹ் அவர்களின் சர்வதேச வணிகம், நிதி நிறுவனம்(IIBF) ஏற்பாடு செய்யும் ஜகாத் மேலாண்மை பாடத் திட்டம் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

'முஸ்லிம் ஃபஸீலின் பொருளாதாரத் துறை' (தர்ஜுமானுல்- குர்ஆன், லாகூர் - 2021) என்ற கட்டுரை, மதரஸாக்களில் பட்டம் பெறும் அறிஞர்கள் தங்களுடைய வாழ்க் கைச் செலவுகளைச் சம்பாதிக்கக் கூடிய புதிய வாய்ப்புகளை விளக்குகிறது. அந்த வாய்ப்பு களில் முன்னணியில் இருப்பது ஜகாத்தின் கூட்டு முறை ஆகும்.

### 4. செயல் மையமாக மஸ்ஜித்கள்

ஒவ்வொரு உள்ளூர் மஸ்ஜிதிலும் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுவில் மார்க்க அறிஞர், நிபுணத்துவம் பெற்ற பட்டய கணக்காளர் உள்ளிட்ட சில சமூக சேவையாளர்கள் இருக்க வேண்டும். இந்தக் குழு தங்கள் பகுதியில் உள்ள மக்களின் சமூக, பொருளாதார நிலையை மதிப்பிடவேண்டும். குடும்பங்களின் நிதி நிலை, வருமான ஆதாரங்கள், தேவைகள், தன்னிறைவு பெறும் வாய்ப்புகள் ஆகியவை இதில் முறையாக ஆய்வு செய்யப்பட வேண்டும். குறிப்பாக பெண்கள், குழந் தைகளின் நிதி நிலை சரியாக மதிப்பிடப் பட வேண்டுமென்பதால், இந்த முயற்சியில் பெண்களின் பங்கேற்பு மிகவும் அவசிய மானதாகும். இதன் மூலம் குடும்பங் களின் நிலையை உண்மைக்கு நெருக்க மாக அறிய முடியும். ஜகாத் விநியோகமும் நியாயமானதும் பயனுள்ளதுமானதாக மாறும்.



நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான (SDGs Achievement) மிகப்பெரிய ஆற்றலை ஜகாத் கொண்டுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு துணை நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது

### 5. நிதி தொழில்நுட்பத்தின் பயன்பாடு (FinTech)

ஜகாத்தை சேகரித்தல் (Collection), விநியோகம்(Distribution) செய்வதில் Financial Technology (FinTech) பயன்பாடு, முழுமையான வெளிப்படைத்தன்மை, நம்பிக்கை ஆகியவற்றை வலுப்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்த கருவியாகும். இன்றைய காலகட்டத்தில் உலகெங்கிலும் உள்ள பல அறக்கட்டளை, அமைப்புகள், NGOக்கள், ஆன்லைன் கூட்டுநிதி சேகரிப்பு மூலம் கூட்டு நிதி ஆதரவை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றன.

உதாரணமாக, Crowdfunding, Internet of Things (IoT), Blockchain technology (கணக்கியல், Audit, Tracking நோக்கங்களுக்காக) ஆகியவை நிதி மேலாண்மைத் துறையில் வேகமாக வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பங்களாகும். குறிப்பாக Blockchain based Accounting and Auditing Systems, ஜகாத் நிதியின் வரவு-செலவுகளை மாற்றமற (Tamper - Proof) முறையில் பதிவு செய்ய உதவுகின்றன.

இந்த Modern FinTech Models நமது தாயகத்தில் ஜகாத் மேலாண்மை (Zakat Management), நிர்வாகம் (Administration) ஆகியவற்றில் முறையாகப் பயன்படுத்தப்பட்டால், வெளிப்படைத்தன்மை அதிகரிக்கும். மக்களின் நம்பிக்கை வலுப்படும், மேலும் ஜகாத்தை ஒரு Sustainable Socio economic development model ஆக மாற்றும் வாய்ப்பு உருவாகும்.

இவ்வாறு, நவீன Financial Innovations ஜகாத் அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டால், ஒரு புதிய பொருளாதார எழுச்சி (Economic Upliftment) என்ற கனவு நனவாகும். (ICIF Newsletter, May 2024, pp. 4, 10, 14, 16)

### 6. ஜகாத், நுண்நிதி (Zakat, Microfinance)

ஜகாத் செலவிடப்பட வேண்டிய எட்டுப் பிரிவுகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படுவது 'அல்-காரிமீன்' (Al Gharimeen) அதாவது கடன் சுமையில் சிக்கியவர்கள். டாக்டர் ஹமீதுல்லாஹ் அவர்களின் ஆய்வின்படி, உமர்(ரலி) அவர்களின் காலகட்டத்தில் அல்-காரிமீன் என்ற சொல்லுக்கு ஒரு புதிய செயல்முறை விளக்கம் (Functional Interpretation) வழங்கப்பட்டது. அது அரசாங்கத்தின் பைத்துமால் மூலம் மக்களுக்கு உதவி வழங்குவதற்காக மட்டுமல்ல; மாறாக, வட்டியில்லா கடன்கள்(Interest Free Loans) வழங்குவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. இதனால் உமர்(ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஜகாத் நிதியிலிருந்து வட்டியில்லா கடன்கள் வழங்கப்பட்டன என்பதற்கான தெளிவான வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன.

இந்த அடிப்படையில், சிறு தொழிலதிபர்கள் (Small Entrepreneurs), சிறு வியாபாரிகள் (Micro Traders) ஆகியோருக்கு ஆரம்ப மூலதனம் (Start up capital) வழங்க ஜகாத் பணம் பயன்படுத்தப்பட்டால், அது படிப்படியாக வறுமையை ஒழிப்பதுடன் பொருளாதாரத் தன்னிறைவை உருவாக்கும். மட்டுமின்றி ஜகாத்திற்குத் தகுதியானவர்கள் சில ஆண்டுகளில் ஜகாத் செலுத்துபவர்களாக (Muzakki) மாறுவதற்கும் வழிவகுக்கும்.

மலேசியா போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு சிறந்த மாதிரி உள்ளது. அங்கு ஏழைகள் இரண்டு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றனர்.

#### உற்பத்தி செய்ய முடியாத ஏழைகள் (Non productive poor).

இதில் முதியவர்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், நாள்பட்ட நோயாளிகள், வேலை செய்ய இயலாதவர்கள் ஆகியோர் அடங்குவர். இவர்களுக்கு நிரந்தர, தொடர்ச்சியான உதவி (continuous social support) வழங்கப்படுகிறது.

#### உற்பத்தி செய்ய முடியும் ஏழைகள் (Productive poor)

இதில் மூலதனம் இல்லாததால் தொழில் தொடங்க முடியாத ஆண்கள் பெண்கள், திறன் இருந்தும் வாய்ப்பு இல்லாதவர்கள் ஆகியோர் அடங்குவர். இவர்களுக்கு நிரந்தர உதவி வழங்கப்படுவதில்லை. மாறாக

அவர்களின் தொழில்கள்(Business), உபகரணங்கள்(Equipment) ஆகியவற்றிற்காக ஒரு முறை பெரிய தொகையாகவோ (Lump sum) அல்லது தவணைகளாகவோ (Installments) ஜகாத் நிதி வழங்கப்படுகிறது.

இந்த முறையின் முக்கிய நோக்கம், 'முஸ்தகீக் ஜகாத்' (Mustahiq e Zakat) - ஜகாத் பெறுபவர்களை, 'முசாக்கி ஜகாத்'(Muzakki e Zakat)- ஜகாத் கொடுப்பவர்களாக மாற்றுவது. இவ்வாறு, Microfinance based Zakat model மூலம் தொழில் முனைவோரை ஊக்குவித்து, மிகக் குறுகிய காலத்திலேயே அவர்களைத் தன்னிறைவு(Self Reliance) அடையச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. (Habib Ahmed, Role of Zakah and Awqaf in Poverty Alleviation, Occasional Paper No. 8, Islamic Development Bank Group, IRTI, Jeddah, 2004, pp. 77-82)

### 7. ஜகாத்தும் முஸ்லிம் அல்லாதவர்களும்..!

ஜகாத் எப்படிச் செலவிடப்பட வேண்டும் என்பதைத் திருக்குர்ஆன் தெளிவாகக் குறிப்பிடுகிறது. அதில் 'ஃபுகரா'(Fuqara), 'மஸாகின்' (Masakeen) என்ற இரண்டு முக்கியப் பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. டாக்டர் முஹம்மது ஹமீதுல்லாஹ் அவர்களின் விளக்கப்படி, இந்த இரண்டு சொற்களுக்கிடையே ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது: 1. ஃபுகரா ஏழையான முஸ்லிம்கள் 2. மஸாகின் ஏழையான முஸ்லிம் அல்லாதவர்கள்.

அதாவது குர்ஆன் ஜகாத் செலவைப் பற்றி பேசும்போது, அது முஸ்லிம்களுக்கு மட்டுமே எனக் குறுகிய வரம்பில் நிற்கவில்லை; மாறாக, சமூகத்தில் உள்ள ஏழை மக்களையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில், பேராசிரியர் அப்துல் அஸிம் இஸ்லாஹி அவர்கள் எழுதுகிறார்: 'ஜகாத்தின் எட்டு செலவுப் பிரிவுகளில், இரண்டாவது கலீஃபா 'ஃபுகரா' என்பதன் மூலம் முஸ்லிம்களையும், 'மஸாகின்' என்பதன் மூலம் வேதத்தின் மக்கள் (யூதர், கிறித்தவர்கள் போன்ற முஸ்லிம் அல்லாதவர்கள்) என்பதையும் குறிப்பிட்டுள்ளார்' (அல்லாமா ஷிப்லி நூமானி, அல்-ஃபாரூக், பக். 128)

டாக்டர் முஹம்மது ஹமீதுல்லாஹ், இமாம் அபு யூசுஃப் எழுதிய அல்-கராஜ் என்ற நூலை மேற்கோள் காட்டுகிறார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முக்கியமான சம்பவம்: ஒரு நாள் உமர்(ரலி) அவர்கள் மதீனாவின் தெருக்களில் ஒரு யூத முதியவர் யாசகம் கேட்பதைப் பார்த்தார்கள். உடனே அவர், அந்த மனிதரிடமிருந்து வசூலிக்கப்பட்ட ஜிஸ்யா வரியை ரத்து செய்தார். மேலும் பைத்துல் மாலிலிருந்து அவருக்குத் தேவையான வாழ்வாதார உதவியை வழங்க உத்தரவிட்டார். அப்போது உமர்(ரலி) அவர்கள் கூறினார்: 'இவர் வேதத்தின் மக்களில் ஒருவராகிய ஒரு ஏழை.' (குத்பத் பஹாவல்பூர், பக். 341-342)

இதன் மூலம், இஸ்லாமிய நிர்வாகத்தில் ஏழ்மை மட்டுமே அளவுகோல் என்றும், மதம் அல்ல என்றும் தெளிவாகிறது. இதையே வலியுறுத்தி டாக்டர் ஃபஸ்லுர் ரஹ்மான் ஃபரிதி அவர்கள் எழுதுகிறார்: 'ஜகாத் என்பது முஸ்லிம்களுக்கு மட்டுமே என்ற கட்டுப்பாட்டில் இல்லை. அது தகுதியுள்ள அனைவருக்கும், அவர்களின் மதம் அல்லது பிரிவைப் பொருட்படுத்தாமல் செலவிடப்பட வேண்டும்.

ஜகாத் குறித்து கூறும் குர்ஆன் வசனங்கள், ஏழைகள் மீது நம்பிக்கையின் (மதத்தின்) நிபந்தனையை விதிக்கவில்லை' (அதல் கி தலாஷ், பக். 49)

### 8. பிற நாடுகளின் வெற்றிகரமான அனுபவங்களிலிருந்து கற்றல்

இன்று உலகளவில் World Zakat Forum (உலக ஜகாத் மன்றம்) என்ற அமைப்பில் சுமார் நாற்பது நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த நாடுகள் தங்களது சமூக, பொருளாதார சூழலுக்கு ஏற்ற வகையில் ஜகாத் கூட்டு முறையை அமைத்துக் கொண்டு செயல்படுத்தி வருகின்றன. இதன் மூலம், ஜகாத் வெறும் உடனடி உதவிக்கான ஒரு வழிமுறை அல்ல; அது சரியான திட்டமிடல், நம்பகமான நிர்வாகம் என்பதை உணர முடிகிறது.

நீண்ட கால நோக்கத்துடன் செயல்படுத் தப்பட்டால் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த கருவி என்பதை நடை முறையில் நிரூபித்துள்ளனர். இந்த நாடுகளின் அனுபவங்கள் நமது நாட்டிற்கு முக்கியமான வழிகாட்டுதல்களாக உள்ளன.

இந்தோனேசியாவில் செயல்படும் BAZNAS (Badan Amil Zakat Nasional) என்ற தேசிய ஜகாத் நிறுவனம், ஜகாத் பணத்தை வெறும் ஏழைகளுக்குத் தரும் உதவியாக மட்டும் பயன்படுத்துவதில்லை. மாறாக, சமூக மேம்பாட்டு திட்டங்கள்(Social Development Projects), கல்வி(Education) பொது சுகாதாரம்(Public Health) போன்ற துறைகளில் திட்டமிட்ட முதலீடுகளாக மாற்றி வருகிறது. இதன் விளைவாக, ஜகாத் பெற்றவர்கள் தொடர்ந்து உதவிக்குப் பிறரைச் சார்ந்திருக் காமல், தங்களது வாழ்க்கையைத் தாங்களே முன்னேற்றிக் கொள்ளும் நிலைக்கு உயர்ந் துள்ளனர்.

இவ்வாறு வறுமையை தற்காலிகமாக அல்ல, நீண்டகால அடிப்படையில் குறைப் பதே BAZNASஇன் முக்கிய சாதனையாகும். அதேபோல், SENZAF (South African National Zakah Fund) என்ற தென்னாப்பிரிக்க ஜகாத் நிறுவனம் மிகவும் முக்கியமான ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தென் னாப்பிரிக்காவில் முஸ்லிம்கள் மொத்த மக்கள் தொகையில் இரண்டு முதல் மூன்று விழுக்காடு மட்டுமே உள்ளனர். இருந்தாலும், இந்த அமைப்பு பல தசாப்தங்களாக நம்பகத் தன்மையுடனும் வெளிப்படைத்தன்மை யுடனும் செயல்பட்டு வருகிறது.

பங்களாதேஷிலும் ஜகாத் அமைப்புகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்று வருகின்றன. அங்கு ஜகாத் பணம் கிராமப்புற மேம்பாடு (Rural Development) குழந்தைகள் கல்வி (Children's Education) ஆகிய துறை களில் பயனுள்ளதாக பயன்படுத்தப்படுகிறது. பள்ளி, கல்வி வசதிகள், குடும்ப அடிப்படை யிலான வருமான உருவாக்கத் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் பல குடும்பங்கள் நிரந்தர வருமானம் பெறும் நிலைக்கு வந்துள் ளன. இதன் விளைவாக, அவர்கள் வறுமை யிலிருந்து மெதுவாக வெளியேறி தன்னி றைவு அடையும் நிலையை அடைகின்றனர்.

### 9. ஜகாத் நிர்வாகத்தில் பெண்கள்

Zakat Management Center (ZMC) என்ற அமைப்பு அதன் நிர்வாக அமைப்பின் காரணமாக உலக அளவில் கவனம் பெற் றுள்ளது. இந்த அமைப்பை இரண்டு பெண்கள் தலைமையேற்கின்றனர். தலைவர் (Chairperson) ஃபெரோஸ் முஹம்மது (Feroz Muhammad) தலைமை நிர்வாக அதிகாரி (CEO) யாஸ்மினா ஃபிரட்னிக் (Yasmina Fradnik) ஆகியோர் இணைந்து இதனை வழிநடத்துகின்றனர். இந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களில் 52 விழுக்காடு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூகத்திறன் மேம்பாடு(Community Capacity Building) தொண்டு சேவைகளில் அவர்கள் செய்த சிறப்பான பணிகளை அங்கீகரிக்கும் விதமாக, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் (University of Cambridge) இங்கிலாந்தின் சர்வதேச பொருளாதார ஆலோசனைக் குழு (UK International Economic Advisory Council) இணைந்து வழங்கும் 3G Global Management Excellence Award என்ற உலகளாவிய விருது இந்த அமைப்புக்கு வழங்கப்பட்டது. இது, ஜகாத் நிர்வாகத்தில் பெண்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதைத் தெளி வாக வெளிப்படுத்துகிறது.

### 10. ஜகாத், நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs)

வறுமையை ஒழித்தல், பசியைப் போக் குதல், சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், தரமான கல்வியை உறுதி செய்தல், பொரு ளாதார சமத்துவமின்மையைக் குறைத்தல் போன்ற பல முக்கிய இலக்குகளை உள் ளடக்கியதாக, 2015 முதல் 2030 வரை யிலான காலகட்டத்திற்கான Sustainable Development Goals(SDGs) என்ற ‘நிலையான வளர்ச்சி இலக்குகளை’ ஐக்கிய நாடுகள் சபை (United Nations) நிர்ணயித்துள்ளது.

இந்த இலக்குகள் உலக அளவில் மனித நலனை உயர்த்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டமாகக் கருதப்படுகின்றன.

சிந்தித்துப் பார்த்தால், ஜகாத் அமைப்பு இந்த இலக்குகளின் அடிப்படைக் கருத்துகளை ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பே தனது கட்டமைப்பில் உள்ளடக்கியிருப்பது மிகுந்த கவனத்திற்குரிய ஒன்றாகும்.

இந்தோனேசிய ஜகாத் அமைப்புடன் இணைந்து தயாரிக்கப்பட்ட ஒரு ஆய்வு செயல் திட்டத்தில், ஜகாத் என்ற இஸ்லாமிய கடமை பணக்காரர்களிடமிருந்து ஏழைகளுக்குச் செல்வத்தை மாற்றுவதற்கான மிகவும் பயனுள்ள, நடைமுறைச் சாத்தியமுள்ள வழிமுறையாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு துணை நிறுவனம் அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்துள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான (SDGs Achievement) மிகப்பெரிய ஆற்றலை ஜகாத் கொண்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம், ஜகாத் ஒரு மதம் சார்ந்த கடமை மட்டுமல்ல, உலகளாவிய வளர்ச்சி இலக்குகளுடன் இணைக்கக்கூடிய ஒரு வலுவான சமூக, பொருளாதாரக் கருவி என்பதும் தெளிவாகிறது.

சையத் சஆதத்துல்லா ஹுசைனி கூட்டு ஜகாத் முறையின் அவசியத்தை விளக்கும்போது, அதை ஒரு சாதாரண நடவடிக்கையாக அல்லாது, ஒரு திட்டமிட்ட தொடர்ச்சியான இயக்கத்தின் வடிவில் நிறுவ வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இந்த கூட்டு ஜகாத் முறையை ஆரம்ப கட்டத்தில் ஒரு கிராமம், நகரம் அல்லது நகராட்சி மட்டத்தில் அமைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிடுகிறார். இவ்வாறு நிறுவப்படும் கூட்டு ஜகாத் அமைப்புகள், ஏழை, வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவித்தொகை, கல்வி உதவிகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், இளைஞர்கள் பிறரிடம் சார்ந்திருக்காமல் தங்கள் சொந்தக் காலில் நிற்கும் வகையில், திட்டமிட்ட முறையில் தொழில் நுட்ப, வணிகப் பயிற்சிகளை வழங்குவதற்கும் பெரும் பங்காற்ற முடியும்.

இதன் மூலம் ஜகாத் வெறும் நிதியுதவி மட்டுமல்லாமல், சமூகத்தின் மனித வள வளர்ச்சிக்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாக மாறும் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். (இந்தியாவில் ஜகாத் அமைப்பு, சமூக மேம்பாடு, 2018, பக். 20)

இந்தத் தேவையை மௌலானா அபுல் கலாம் ஆசாத் இன்னும் தெளிவாகவும் உறுதியான வார்த்தைகளிலும் விளக்குகிறார். அவர் கூறுவதாவது: ‘இன்றைய சூழலில் முஸ்லிம்கள் வேறு எதையும் செய்யாமல், குர்ஆனின் தெளிவான கட்டளைகளின்படி ஜகாத் தொடர்பான பிரச்னையை மட்டும் முறையாகச் சரி செய்தால், முஸ்லிம் சமூகத்தை வாட்டும் அனைத்து கூட்டுப் பிரச்னைகளுக்கும், துயரங்களுக்கும் தீர்வு தானாகவே உருவாகும். ஆனால் சிக்கல் என்னவென்றால், முஸ்லிம்கள் குர்ஆனின் கட்டளைகளைச் செயல்படுத்துவதை முற்றிலுமாக கைவிட்டுவிட்டார்கள் அல்லது அவற்றைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டே, உண்மையில் அதன் நோக்கத்திற்கேற்ப செயல்படுத்தாத முறையில் பின்பற்றுகிறார்கள் என்பதே ஆகும். (ஹகீகத்துல் ஜகாத், லாகூர், பக். 26)

முஸ்லிம் ஆண்களும் பெண்களும், உலமா, சமூக சேவையாளர்கள், அறிவுஜீவிகள் ஆகியோர் தங்களுக்குள்ள உயர்ந்த அறிவு, அனுபவம், திறன்களை ஒருங்கிணைத்து, கூட்டு ஜகாத்தின் இந்த மகத்தான அமைப்பை நிறுவுவதில் சிறப்புக் கவனம் செலுத்துவது காலத்தின் அவசரத் தேவையாக மாறியுள்ளது.

இவ்வாறு திட்டமிடலுடனும், பொறுப்புணர்வுடனும் கூட்டு ஜகாத் முறை செயல்படுத்தப்பட்டால், சில ஆண்டுகளுக்குள் சமநிலையும் வளமும் கொண்ட, பொருளாதார ரீதியாக தன்னிறைவு பெற்ற ஒரு வலுவான இஸ்லாமிய சமுதாயத்தை உருவாக்குவது முழுமையாக சாத்தியமாகும்.

# ஜகாத்

## அல்-அமீன் எத்தீம் கானா

அல்-அமீன் நகர், கோ.புதூர், மதுரை - 625007.

அஸ்ஸலாமு அலைக்கும்
அல்லாஹ்வின் அளப்பெரும் கருணையினால்...

**நமது மதுரை அல்-அமீன் எத்தீம்கானா
65 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.**

உலகெங்கும் பணியாற்றி கொண்டிருக்கும்
ஆயிரமாயிரம் மாணவர்களே அதற்கு மகத்தான சாட்சி.

எத்தீம் பிள்ளைகளுக்கு முழுமையான தீன்கல்வி, கல்லூரிப் படிப்பு வரை உலக கல்வி, உணவு, உடை, மருத்துவம், தங்கும் வசதி என அத்துனையும் இலவசமாக வழங்கி தாயன்புடன் பராமரித்து பாதுகாத்து வரும் நமது அல்-அமீன் எத்தீம் கானாவிற்கு

## உங்கள் ஜகாத்தை பெருமளவில் வழங்கி

### எத்தீம் பிள்ளைகளின் உயர்வுக்கு உதவிடுமாறு

அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் ஜகாத் / சதகா
போன்ற உதவிகளை கீழ்க்கண்ட வங்கி கணக்கு அல்லது QR Code மூலமாக அனுப்பி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**BANK ACCOUNT DETAILS**

A/c Name : AL-AMEEN ETHEEM KHANA

Current A/c No: 435401010010013

IFSC Code: UBIN0803499

Union Bank of India, South Masi Street, Madurai-625 001

Scan & Donate

இன்ஷா அல்லாஹ், வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியதும் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

AL-AMEEN ETHEEM KHANA 65 YEARS
DON'T REPEL ORPHANS, SINCE 1960
MADURAI

**நமது எத்தீம் கானா சார்பாக வசூல் செய்ய எப்போதும் யாரையும் நியமிக்கவில்லை**

மேலும் விபரங்களுக்கு 98420 21786 | 97894 89494



الحسام
AL HUSSAM
044 - 2640 2420
044 - 2640 2421
044 - 2640 0422
+91-72994 60725
+91-99413 72228
+91-98651 47376
رمضان كريم
Ramadan Kareem
AL HUSSAM
Travel & Tours India (P) Ltd
Experience makes the difference
ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள். - அல்குர் ஆன் - 2 : 196
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...
alhussamchennai@gmail.com
www.alhussam.in

# ஜின்களால் மறைவானவற்றை அறிய முடியுமா?

**பிறகு நாம் ஸுலைமான் மீது மரணத்தை விதித்தபோது, அவருடைய கைத்தடியைத் தின்று கொண்டிருந்த கரையான்களைத் தவிர வேறெதுவும் அவருடைய மரணத்தைப் பற்றி அந்த ஜின்களுக்கு அறிவித்துக் கொடுக்கவில்லை. இவ்வாறு ஸுலைமான் கீழே சாய்ந்ததும் ஜின்களுக்குப் புலப்பட்டது.[23] மறைவானவற்றை அவர்கள் அறிபவர்களாய் இருந்திருந்தால் இழிவுதரும் இவ்வேதனையில் அவர்கள் சிக்கியிருக்க மாட்டார்களே![24]**

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனம் : 14**

**23.** மூலத்தில் 'தபய்யனத்துல் ஜின்னு' என்கிற சொற்கள் உள்ளன. இதற்கான ஒரு பொருள் மேலே மொழிபெயர்ப்பில் தரப் பட்டிருக்கின்றது. மேலும், 'ஜின்களின் நிலைமை வெளிப்பட்டுவிட்டது அல்லது அம்பலமாகிவிட்டது' என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். முதலாவதாகத் தரப்பட்ட பொருள் தருகின்ற செய்தி: 'மறை வானவற்றையெல்லாம் அறிந்தவர்கள் நாம் எனத் தம்மைத் தாமே நினைத்துக் கொண் டும் இறுமாந்துக் கொண்டும் இருந்தது பொய்' என்கிற உண்மையை ஜின்கள் உணர்ந்துகொண்டார்கள். இரண்டாவதைக் கருத்தில் கொண்டால், 'மறைவானவற்றை யெல்லாம் அறிந்தவர்கள் என்று இந்த ஜின்களைக் குறித்து பொதுமக்கள் நினைத்து வந்தார்கள். அவர்களுக்கு இப்போது ஜின்க ளுக்கு மறைவானவற்றைப் பற்றிய அறிவு இல்லை என்கிற உண்மை வெளிப்பட்டு விட்டது' என்று பொருள் வரும்.

**24.** 'சுலைமான்(அலை) அவர்களின் மகன் ரிஹோபோம் ஒன்றுக்கும் தகுதியில் லாதவராய், உருப்படாதவராய், உல்லாச மோகியாய், எதற்கெடுத்தாலும் ஒத்துப் பாடுகின்ற நண்பர்களால் சூழப்பட்டவராய் இருந்ததன் காரணத்தால் தம்முடைய சீரும் சிறப்பும் வாய்ந்த தந்தையாரின் மரணத் துக்குப் பிறகு தம் மீது விழுந்த மகத்தான ஆட்சிப் பொறுப்பை அவரால் நிறை வேற்றவே இயலாமல் போனது; அவர் பதவியேற்ற குறுகிய காலத்திலேயே அந்தப் பரந்து விரிந்த மிகப் பெரும் சாம்ராஜ்யம் சரிந்து வீழ்ந்தது. மேலும் சுலைமான்(அலை) தம்முடைய பெருவலிமையைக் கொண்டு எந்த எல்லையோர கோத்திரத்தாரை (அதா வது ஜின்களை) சேவகர்களாக ஆக்கி வைத்திருந்தாரோ அவர்கள் எல்லோரும் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறினார்கள்' என்பதைத்தான் இந்த வசனங்கள் உணர்த்து வதாக தற்காலத்து விரிவுரையாளர்கள் சிலர் விளக்கம் அளிக்க முற்பட்டிருக்கின்றார்கள்.

ஆனால் இந்த விளக்கம் எந்த வகை யிலும் குர்ஆனின் சொற்களோடு இயைந்து போகின்றவையாய் இல்லை. 'சுலைமான் (அலை) அவர்கள் கைத்தடியை ஊன்றிய வாறு நின்றுகொண்டிருந்த போது அல்லது அமர்ந்திருந்த போது அவருக்கு மரணம் வந்தது. அவருடைய கைத்தடியின் காரணமாக அவருடைய உயிரற்ற உடல் தன்னுடைய இடத்தில் நிலைத்திருந்தது. மேலும் அவர் உயிரோடு இருக்கின்றார் என்கிற புரிதலால் ஜின்கள் அவருக்குக் கீழ் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள். இறுதியில்

*34 ஆம் பக்கம் பார்க்க...*

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# நோன்பை பாழாக்கும் செயல்!

**ஒரு முறை இரண்டு நோன்பாளிகள் (நபி(ஸல்) அவர்களின் பின்னால் நின்று) தொழுதார்கள்.**

**தொழுகை முடிந்ததும் அவர்களைப் பார்த்து நபி(ஸல்) அவர்கள், 'செல்லுங்கள். மீண்டும் ஒளு செய்து மறுபடியும் உங்களுடைய தொழுகையை நிறைவேற்றுங்கள். உங்களுடைய நோன்பை முழுமை யாக நோற்று முடித்துவிட்டு வேறொரு நாள் 'களா' நோன்பு வையுங்கள்' என்று கூறினார்கள்.**

**அவ்விருவரும், 'ஏன், இறைத்தூதரே?' என்று கேட்டார்கள்.**

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஏனெனில் நீங்கள் இருவரும் இன்ன மனிதரைப் பற்றி புறம் பேசினீர்கள்!'**

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ்(ரலி)
நூல் : பைஹகி

புறம் பேசுவதால் ஒளு, தொழுகை, நோன்பு ஆகியவற்றின் ஒளியும் பொலிவும் குன்றிவிடுகின்றன என்பது இந்த நபிமொழியிலிருந்து தெளிவாகின்றது. ஆலிம்களின் பார்வையில் புறம் பேசுவதால் ஒளுவோ, தொழுகையே, நோன்போ முறிவதில்லை.

என்றாலும் புறம் பேச நேர்ந்துவிடும் போது ஒளுவைப் புதுப்பித்துக் கொள்வதுதான் இறையச்சம் விரும்புகின்ற நடத்தை ஆகும். புறம் பேச நேர்ந்துவிடும்போதுதான் என்றில்லை, மிதமிஞ்சிய அரட்டை, சிரிப்பு, கேலி, கிண்டல் போன்ற வீணான செயல்களில் ஒருவர் ஈடுபட நேர்ந்து விடும் போதும் ஒளுவைப் புதுப்பித்துக் கொள்வது விரும்பத்தக்கது ஆகும்.

இவ்வாறாக அந்த வீணான செயல்களில் ஈடுபட்டதன் விளைவாக அவருடைய இதயத்தின்மீது படிந்துவிடுகின்ற இருள் சற்றேனும் அகல்வது சாத்தியமாகும். நோன்பாளியும் புறம் பேசுவது போன்றவற்றிலிருந்து முற்றாக விலகியிருப்பதும், தம்முடைய நோன்பைப் பாதுகாத்துக் கொள் வதில் விழிப்புடன் இருப்பதும் அவசியமாகும்.

நபிமொழி விளக்கம் ✸ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✸ தமிழில் : அபூ ஹானியா

32 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அந்தக் கைத்தடியைக் கரையான்கள் தின்று விட்ட போது அது உள்ளுக்குள் பொத்தலாகிக் கொண்டே போனதால் அவருடைய உயிரற்ற உடல் தரையில் சரிந்து விழுந்தது. மேலும் அந்தக் கணத்தில்தான் ஜின்களுக்கு அவர் ஏற்கனவே மரணித்துவிட்டார் என்கிற விவரமே தெரிந்தது' என்பதுதான் குர்ஆனின் சொற்கள் நமக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்துகின்ற சித்திரமாகும்.

நடந்ததை நடந்தபடி துல்லியமாகவும் தெளிவாகவும் தீர்க்கமாகவும் எல்லாமே எடுத்துரைக்கப்பட்டிருக்க கரையான்கள் கைத் தடியைத் தின்றன என்பது சுலைமான்(அலை) அவர்களின் உருப்படாத மகனின் செயல் களைக் குறிக்கின்றன என்றும், கைத்தடி என்பது சுலைமான்(அலை) அவர்களின் ஆட்சியதிகாரத்தைக் குறிக்கின்றது என்றும், அவருடைய உயிரற்ற உடல் சரிந்து விழு தலோ அவருடைய சாம்ராஜ்யம் சிதறிப் போவதைக் குறிக்கின்றது என்றும் இழுத்துப் பிடித்து அர்த்தம் கற்பிப்பதற்கான அறிவார்ந்த காரணம்தான் என்னவோ?

இவர்களின் இந்தக் கருத்தைத்தான் சொல்ல வேண்டியிருந்ததெனில் இப்படிச் சுற்றி வளைத்துச் சொல்ல வேண்டிய அள வுக்கு அரபியே முபீன் என்கிற தெள்ளத் தெளிவான அரபு மொழியில் அல்லாஹ் வுக்குச் சொற்கள் இல்லாமல் போனதா, என்ன? இப்படி விடுகதைகளைச் சொல்லி யும் சிலேடைகளைப் பயன்படுத்தியும் செய்தியை எடுத்துரைக்கின்ற பாணி குர்ஆனில் வேறு எங்காவது ஆளப்பட்டிருக் கின்றதா, என்ன? இந்த வசனங்கள் முதன் முதலாக அருளப்பட்ட போது நபிகளார் (ஸல்) காலத்து சாமான்ய மக்கள் இந்த விடு கதைகளுக்கும் சிலேடைகளுக்கும் எப்படி தீர்வு கண்டிருப்பார்கள்?

இந்த விளக்கத்தில் ஜின்கள் (சுலைமான் (அலை) தம்முடைய சேவைக்காக பணி யமர்த்தி வைத்திருந்த ஜின்கள்) என்பது எல்லையோரப் பகுதிகளைச் சேர்ந்த கோத்திரத்தாரைக் குறிக்கும் என்று சொல் லப்பட்டிருப்பதுதான் இந்த விளக்கத்தின் விந்தையான பகுதியாகும். இந்தக் கோத் திரத்தாரில் எவரேனும் தமக்கு மறைவான வற்றைப் பற்றிய ஞானம் இருப்பதாக வாதிட்டார்களா? இவர்களில் எவரையேனும் மறைவானவற்றைப் பற்றிய ஞானத்தைக் கொண்டவர்களாக இணைவைப்பாளர்கள் நினைத்து வந்தார்களா? என்பதுதான் இங்கு எழுகின்ற கேள்வி.

வசனத்தின் இறுதிப் பகுதியை கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு வாசிக்கின்ற எவரும் இங்கு 'ஜின்கள் என்பது திண்ணமாக தமக்கு மறைவானவற்றைப் பற்றிய ஞானம் இருப்பதாக வாதிட்டு வந்த குழு வினராகவோ மறைவானவற்றைப் பற்றிய ஞானத்தைக் கொண்டவர்களாக மக்களால் நினைக்கப்பட்டு வந்த குழுவினராகவோ தான் இருக்க வேண்டும்' என்பதையும், 'மேலும் சுலைமான்(அலை) அவர்கள் மரணித்து விட்டிருக்க, அதனை அறியா மலேயே அவர்கள் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்த நிகழ்வால் 'மறைவானவற் றைப் பற்றிய ஞானம் கொண்டவர்கள்' என்கிற அவர்களைப் பற்றிய பிம்பம் உடைந்து நொறுங்கியது' என்பதையும் தெள்ளத் தெளிவாக உணர்ந்துக்கொள்வார்.

ஈமானும் நம்பிக்கையும் நிறைந்த எந்தவொரு மனிதரும் மகத்துவம் மிக்க குர்ஆனின் இந்தத் தெளிவான கூற்றைப் பார்த்து ஜின்கள் என்பது எல்லையோரக் கோத்திரத்தைக் குறிக்கும் என்கிற கருத்தை மீளாய்வு செய்துகொள்வார்; திருத்திக் கொள்வார். ஆனால் உலகத்துக்கு முன்னால் கண்களுக்குப் புலப்படாத ஜின்கள் என்கிற படைப்பை ஏற்றுக்கொள்வதற்கு வெட்கப் படுகின்ற சிலர் குர்ஆனின் இந்தத் தெள்ளத் தெளிவான, திட்டவட்டமான கூற்றுக்குப் பிறகும் தம்முடைய விளக்கத்திலேயே விடாப்பிடியாக நிற்கின்றார்கள்.

அரபு இணைவைப்பாளர்கள் ஜின்களை வல்லோன் அல்லாஹ்வுக்கு இணையான

வர்களாய் அறிவித்து வந்தார்கள் என்றும் மேலும் அல்லாஹ்வின் பிள்ளைகளாய் அவர்களைக் கருதி வந்தார்கள் என்றும் அவர்களிடம் புகலிடம் தேடி வந்தார்கள் என்றும் குர்ஆன் அநேக இடங்களில் அறிவித்துள்ளது.

இருந்தும் மக்கள் ஜின்களை அல்லாஹ்வுக்கு இணையாக்கிவிட்டார்கள். உண்மையாதெனில், அவன்தான் அந்த ஜின்களைப் படைத்தவன். (திருக்குர்ஆன் 6:100)

அல்லாஹ்வுக்கும் ஜின்களுக்கும் இடையே இவர்கள் உறவுமுறையை ஏற்படுத்தி வைத்துள்ளார்கள். (திருக்குர்ஆன் 37:158)

மேலும் மனிதர்களில் சிலர் சில ஜின்களிடம் பாதுகாவல் கோரக்கூடியவர்களாய் இருந்தனர். (திருக்குர்ஆன் 72:6)

ஜின்கள் மீது அவர்கள் கொண்டிருந்த இந்தமாதிரியான நம்பிக்கைகளில் ஒன்றுதான் ஜின்களுக்கு மறைவானவற்றைப் பற்றிய ஞானம் இருக்கின்றது என்கிற அவர்களின் நம்பிக்கையும். இதனால் மறைவானவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்காக அவர்கள் ஜின்களை அணுகி வந்தார்கள். வல்லோன் அல்லாஹ் அவர்களின் இந்தக் குருட்டுத்தனமான நம்பிக்கையை மறுத்துதான் இங்கு இந்த நிகழ்வை எடுத்துரைக்கின்றான். ‘நீங்கள் வேண்டுமென்றே ஜாஹிலிய்யத்-அறியாமையின் தவறான நம்பிக்கைகளை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு நிற்கின்றீர்கள். இத்தனைக்கும் உங்களின் இந்த நம்பிக்கைகள் அனைத்தும் அடிப்படையற்றவையாகும்’ என்கிற உணர்வை அரபு இறைமறுப்பாளர்களிடம் ஏற்படுத்துவதற்காகத்தான் இந்த நிகழ்வு இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

*(தொடரும்)*




ஏக இறைவனின் திருப்பெயரால்

# உம்மு குல்சூம் பெண்கள் கல்லூரி

சென்னை

இவ்வுலகம் மற்றும் மறு உலகத்தில் வெற்றி பெற

## ஓர் அறிய வாய்ப்பு !!

### படிப்பு விவரங்கள்:

- ஆலிமா டிப்ளமோ படிப்பு (3 வருடம்)
- முபல்லிகா படிப்பு (2 வருடம்)
- தீனியாத் (6 மாதம்)
- அஃப்சலுல் உலமா பட்டப்படிப்பு (3 வருடம்)
- 5 Years Hifz + Schooling
- UGC அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்பு (3 வருடம்)
- B.A. (Islamic Studies)
- B.Com (General)
- BCA
- NIOS:8th, 10th & 12th பள்ளி கல்வி

வெகுநாட்களாக தாங்கள் எதிர்பார்த்த மாணவிகளுக்கான மார்க்கக்கல்வியுடன் உலகக்கல்வியும் சார்ந்த பட்டப்படிப்பு பிரபலமான பல்கலைகழகத்தின் ஒப்புதலுடன் எங்கள் கல்லூரியில் வழங்கப்படுகிறது.

- இதர கற்பிக்கும் வசதிகள்
- பாதுகாப்பான வளாகம்
- உணவு வசதியுடன் தங்குமிடம் (ஹாஸ்டல்)
- தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை (Scholarship) வழங்கப்படும்.

## 2026-2027 கல்வி ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

நமது பயிற்சி மையம் இயங்கும் இடம்:

37, ஆசர்கானா தெரு,
(ஆஹ்லே ஹதீஸ் மஸ்ஜித் பின்புறம்)
ஆலந்தூர், சென்னை 600 016.

## விண்ணப்பங்களுக்கு முந்துங்கள் !

9629521962 98412 99584 / 9884439921

படிப்பது சுகமே ! கற்பது நலமே !

# RDB கல்வி நிறுவனங்கள்

RDB
Educational & Charitable Trust

ISO 9001 : 2000 உலகத் தரச் சான்று பெற்ற கல்லூரி.
எண்:4, சாலியமங்கலம் ரோடு, பாபநாசம் - 614 205. தஞ்சாவூர் மாவட்டம்.

## ADMISSIONS OPEN

### RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2 (f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

**UG COURSES**

B.Lit. Tamil | B.A. English
B.B.A., | B.Com., | B.Com., (Commerce)
B.Com., (Computer Application)
B.Com., (Bank Management)
B.C.A., (Computer Application)
B.Sc., (Artificial Intelligence)
B.Sc., (Information Technology)
B.Sc., (Bio-Technology)
B.Sc., (Mathematics)
B.Sc., (Visual Communication)
B.Sc. Mathematics / Physics / Biotechnology
B.Sc. Biochemistry / Microbiology
B.Sc. Visual Communication
B.Sc. Hotel Management & Catering Science
B.Sc. Fashion Technology & Design *
B.Sc. Nutrition and Dietetics *
B.Sc. Psychology *
B.A. Islamic studies *

**PG COURSES**

M.B.A., (Hospital Management)
M.B.A., (General)
M.Com., (Commerce)
M.Sc., (Computer Science)
M.Sc. Information Technology

**RESEARCH COURSE**

M.Phil., (Computer Science)
M.Phil., (Commerce)
M.Phil., (Management)
Ph.D., (Management)
Ph.D., (Commerce)

### RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No : 5353A.1/2.20)

**LKG to XII Std**

**+1 COURSES OFFERED**

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

### RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with "B" Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

### RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (Hospital Management)

**RESEARCH COURSE**

- M.Phil., Management
- Ph.D., Management

### RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM)
(2 Year Diploma Programme)

### RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

**OPENING SOON**


*All Muslim Parents are Requested to Support us in Admissions*

**HOSTEL AVAILABLE FOR GIRL STUDENTS**

63809 80363 / 04374-222123
admissions@rdbcas.edu.in



• சேயன் இப்ராகிம்




# நாடாளுமன்றத்தின் மாண்பைக்
# குலைக்கும் பாஜக

நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் எதிர்க்கட்சித் தலைவரின் உரை இல்லாமலும், பிரதமரின் பதிலுரை இல்லாமலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உரையாற்றுவதிலிருந்து தடுக்கப்பட்டார். பிரதமர் உரையாற்றுவதற்காக நாடாளுமன்றத்திற்கு வர வேண்டாம் என சபாநாயகரே கூறி விட்டார். இது போன்ற விநோதமான நிகழ்வுகள் இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் இதுவரை நடந்ததில்லை.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நேரவானே எழுதியுள்ள Four Stars of Destiny என்ற வெளிவராத நூலிலிருந்து சில செய்திகளைச் சுட்டிக் காட்டி எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தனது உரையில் குறிப்பிட்டதிலிருந்து பிரச்னை ஆரம்பமாயிற்று.

இந்த வெளிவராத நூலில் 2020ஆம் ஆண்டு இந்திய - சீன எல்லைப் பகுதியான கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் சீனத் துருப்புகள் ஆக்கிரமிப்புச் செய்த போது, அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென தான் இராணுவ அமைச்சரையும், பிரதமரையும் தொடர்பு கொண்டு கேட்ட போது அதற்குத் தக்க உத்தரவுகள் அவர்களிடமிருந்து வரவில்லையென்றும், நீண்ட தயக்கத்திற்குப் பிறகு தேவையான நடவடிக்கைகளை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் எனத் தனக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (இந்த மோதலில் 20 இந்திய இராணுவ வீரர்களைக் கல்லால் எறிந்தே சீனப் படையினர் கொன்றதாக இந்திய அரசு அறிவித்தது. எதிர்த்தாக்குதல் நடத்திய இந்தியப் படைகள் பல சீன வீரர்களைக் கொன்றதாகவும் அரசு அறிவித்தது.)

இந்த நூலில் இராணுவத் தளபதி கூறியுள்ள விவரங்களைச் சுட்டிக்காட்டி ராகுல் காந்தி பேச ஆரம்பித்த உடனேயே இராணுவ அமைச்சர் இராஜ்நாத் சிங்கும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் எழுந்து கடும் கோபத்துடன் 'வெளிவராத ஒரு நூலிலிருந்து எந்த ஒரு விஷயத்தையும் எடுத்துப் பேசக் கூடாது' எனக் கூறினர்.

ராகுல் காந்திக்கு ஆதரவாக இந்தியா கூட்டணி உறுப்பினர்களும், அமைச்சர்களுக்கு ஆதரவாக பாஜக உறுப்பினர்களும் குரல் கொடுத்ததால் அவையில் அமளி ஏற்பட்டுப் பல முறை ஒத்தி வைக்கப்பட்டது. மறுநாளும் ராகுல் காந்தி இதே பிரச்னை குறித்துப் பேச முற்பட்ட போது, அரசு தரப்பிலிருந்து அதற்குக் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்நிலையில் ராகுல் காந்தி அந்த நூலில் இடம்பெற்றிருந்த இந்த விஷயத்தை மட்டும் டைப் செய்து அதில் தனது கையொப்பத்தையும் இட்டு சபாநாயகரிடம் அளித்தார். அதனை சபாநாயகர் ஏற்கவில்லை. வெளிவராத நூலிலிருந்து எந்த ஒரு பகுதியையும் மேற்கோள் காட்டி அவையில் பேசக் கூடாது எனக் கண்டிப்பாகக் கூறினார். மீண்டும் அவையில் அமளி ஏற்பட்டது. ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாக எதிர்க்கட்சி உறுப்பினர்களை சபாநாயகர் இடைநீக்கம்(Suspend) செய்து உத்தரவிட்டார். மறுநாளும் அவையில் அமளி நீடித்தது. எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியால் உரையைத் தொடர முடியவில்லை.

இந்நிலையில் அன்று மாலை குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பிரதமர் மோடி பதில் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிரதமர் அவைக்கு வரவில்லை. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இரண்டு பெண் உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிராக 'எதிர்பாராத செயல்' ஒன்றை நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளதாகவும், எனவே பிரதமரின் பாதுகாப்புக் கருதி அவைக்கு வர வேண்டாம் என அவரைக் கேட்டுக் கொண்டதாகவும், அதனால்தான் பிரதமர் அவைக்கு வரவில்லை என சபாநாயகர் அறிவித்தார். சபாநாயகரின் இந்த அறிவிப்பு எதிர்க்கட்சிகளை அதிர்ச்சியடைய வைத்தது. நாட்டு மக்களை வியப்படைய வைத்தது.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அந்த இரண்டு பெண் உறுப்பினர்கள் என்ன 'எதிர்பாராத செயலை' நிகழ்த்தத் திட்டமிட்டிருந்தனர் என சபாநாயகர் விளக்கவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற ஒரு கட்சியின் தலைவரான பிரதமர் மீது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 'எதிர்பாராத செயல்' ஒன்றை நிகழ்த்தத் திட்டமிட்டிருந்தனர் என்பது சபாநாயகரின் கற்பனையான வாதமே. இக்கட்டிலிருந்து பிரதமரைக் காப்பாற்றவே சபாநாயகர் இப்படி ஒரு பழியை எதிர்க்கட்சியின் மீது சுமத்தத் துணிந்துள்ளார் என்பதே உண்மை.

இராணுவத் தளபதி தனது நூலில் குறிப்பிட்டிருப்பது போன்ற ஒரு சம்பவம் நடைபெறவில்லை என அரசுத் தரப்பினர் நாடாளுமன்றத்தில் விளக்கமளித்திருக்கலாம். அல்லது நிலைமைக்குத் தகுந்தாற் போல் நீங்களே தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் என்று இராணுவத் தளபதிக்கு அறிவுறுத்தியதில் தவறு ஏதுமில்லை என வாதிட்டிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாமல் அமைச்சர்களும், பாஜக உறுப்பினர்களும் வெகுண்டெழுந்து எதிர்க்கட்சித் தலைவரைப் பேசவிடாமல் செய்தது எந்த வகையில் நியாயம் என்று தோன்றவில்லை. அரசின் பதற்றத்தைப் பார்க்கின்ற போது அவர்கள் ஏதோ ஒன்றை மறைக்க விரும்புகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

நாடாளுமன்றத்திற்கு வந்து உரையாற்றாத பிரதமர் மாநிலங்களவைக்குச் சென்று குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றியுள்ளார். தனது 90 நிமிட உரையில் அவர் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவை விமர்சிக்கத் தயங்கவில்லை. நேரு இறந்து அறுபது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் பிரதமர் மோடி நேருவைக் குறை கூறிக் கொண்டிருப்பார் எனத் தெரியவில்லை. மேலும், பிரதமர் தனது உரையினூடே மூன்று திருடர்களும் (அதாவது சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி) குஜராத்தைச் சார்ந்த காந்தியின்

பெயரைத் திருடி தங்களுடைய பெயரில் சேர்த்துக் கொண்டதாக ஒரு மலிவான குற்றச் சாட்டை கூறியிருக்கிறார். மகாத்மா காந்தி யின் பெயரை அந்த மூவரும் சுமந்து கொண் டிருக்கவில்லை. இந்திரா காந்தியின் கணவர் பெரோஸ் காந்தி. அவருடைய பெயரையே மனைவி சோனியா காந்தியும், மகன் ராஜீவ் காந்தியும் குடும்பப் பெயராக வைத்துக் கொண்டனர். ராஜீவின் பிள்ளைகளான ராகுலும், பிரியங்காவும் அதே குடும்பப் பெயரைக் கொண்டுள்ளனர். இந்த அடிப்படை உண்மைக் கூடத் தெரியாமல்தான் பிரதமர் பேசுகிறாரா என்று தெரியவில்லை.

மேலும் அவர் தனது உரையில் பொறுப்பு சபாநாயகராகச் செயல்பட்ட தெலுங்கு தேசக் கட்சியின் உறுப்பினர் கிருஷ்ண பிரசாத் தென் னட்டி, அஸ்ஸாமைச் சேர்ந்த பாஜக உறுப்பினர் திலிப் சைகியா ஆகியோர் மீது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாள்களைக் கிழித்து எறிந்த நிகழ்வினைக் குறிப்பிட்டு அந்த தற்காலிக அவைத் தலைவர்களின் ஒட்டுமொத்த சாதியையே எதிர்க்கட்சிகள் அவமதித்து விட் டதாகக் குற்றம் சாட்டினார் (கிருஷ்ண பிரசாத் தென்னட்டி - தலித்; திலிப் சைகியா - பழங்குடி) இப்படிப் பேசுவது பிரதமருக்கு வாடிக்கை யான ஒன்றாகும். ஒருவருக்கு எதிராகச் செய் யப்படும் செயலை, அவர் சார்ந்துள்ள சாதிக்கு எதிராகச் செய்யப்படும் செயல் அல்லது அவர் சார்ந்த சாதியை அவமதிப்பது எனப் பேசுவது ஒரு பிரதமருக்கு அழகல்ல.

இப்படிப் பேசுகின்ற பிரதமர் முஸ்லிம் களுக்கு எதிராக வெறுப்பை உமிழ்கின்ற தனது கட்சிக்காரர்களைக் கண்டு கொள்ளவே மாட்டார். மாறாக, வெறுப்புப் பரப்புரையில் அவர்களை ஈடுபடுமாறு தூண்டுவார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது முஸ்லிம் களுக்கு எதிராக வெறுப்புப் பரப்புரையில் ஈடுபட்டவரே அவர்தானே.

அண்மையில் அஸ்ஸாம் முதல்வர் மியாக்கனுக்கு (வங்க மொழி பேசும் முஸ்லிம் களுக்கு) எவ்வளவு தொல்லைகள் வேண்டு மானாலும் கொடுங்கள் என்று வெளிப் படையாகப் பேசியதையும், குல்லா அணிந்து முஸ்லிம் தோற்றம் கொண்டிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுடுவது போன்று கருத்துப் படம் போட்டதையும் பிரதமர் கண்டுகொள்ளவே இல்லை.

இத்தனைக்கும் பிரதமர் மலேசியாவுக் குச் சென்று அந்நாட்டுப் பிரதமர் அன்வர் இப்ராஹீமை கட்டித் தழுவிக் கொண்டிருந்த போதுதான் அஸ்ஸாம் முதல்வர் முஸ்லிம் களைச் சுடுவது போல கருத்துப் படம் போடுகிறார். நமது பிரதமர் மோடிக்கு அன்வர் இப்ராஹீமை பிடிக்கிறது. உள்ளூர் இப்ராஹீமைப் பிடிக்கவில்லை.

முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் மலேசியாவில் நிலவுகின்ற சமூக நல்லிணக்கத்தைப் பார்த்த பிறகாவது நம்மு டைய பிரதமருக்கு ஞானம் வந்திருக்க வேண்டும். மலேசியாவில் குடியேறி வாழ்ந்து வருகின்ற இந்திய வம்சாவளியைச் சார்ந்த இந்துக்களை அந்நாடு கண்ணியத்துடன் நடத்து கின்றது. அனைத்து விதமான உரிமைகளையும் பெற்று அவர்கள் அந்நாட்டில் நிம்மதியாக வாழ்கின்றனர். இந்திய வம்சாவளியினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகள் தொடர்ந்து அந்நாட்டு ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெற்று வருகின்றன.

உலகிலேயே மிகப் பெரிய முருகன் சிலை கோலாலம்பூரிலுள்ள பத்து மலை முருகன் கோயிலில் இருக்கிறது. தைப்பூசத் திருவிழாவுக்கு கடந்த சில ஆண்டுகளாகத் தான் தமிழக அரசு பொது விடுமுறை அளிக்கிறது. ஆனால் மலேசியாவில் பல ஆண்டுகளாக தைப்பூசத்திற்கு விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது. பிரதமர் மோடியின் மலேசியப் பயணம் அவரது கண்களையும், கருத்துகளையும் திறந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் ஆளு கின்ற பாஜகவினர் திட்டமிட்டு சிறுமைப் படுத்து கின்றனர். ஜனநாயகத்தைக் கேலிப் பொருளாக்குகின்றனர்.


HIDAYAH SCHOOL &
COLLEGE FOR WOMEN
HWT
Welfare Trust For Women
Hidayah Welfare Trust
ADMISSION
OPEN 2026-27
REGISTER NOW
பாடத்திட்டங்கள்
3 வருட ஆலிமா படிப்பு
தையல் பயிற்சி
குர்ஆன் மனனம்
அடிப்படை இஸ்லாமிய வகுப்பு
பெண்களுக்கு 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பள்ளி படிப்பு
Affiliated to nios OBE - AA019168
இதர அம்சங்கள்:
ஹாஸ்டல் வசதி உள்ளது
வளாகத்தில் மஸ்ஜித்
சிறந்த அறிஞர்கள் & பாட வல்லுணர்களின் வகுப்புகள்
வகுப்பறை மற்றும் கண்காணிப்பு கேமராக்களுடன் பள்ளி வளாகம்
நோக்கம்:
தரமான மற்றும் ஆதாரப்பூர்வமான கல்வியின் மூலம் சமூகத்தின் வாழ்வியலை மேம்படுத்துவது
கற்றுக்கொள்ளும் வழிகள்
1. தொலைநிலை: 5ஆம் வகுப்பு மற்றும் 8 ஆம் வகுப்பு வரை பள்ளி படிப்பு & இஸ்லாமிக் கல்வி.
2. நிகல்நிலை - 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பள்ளி படிப்பு
For Admissions Contact
+91 90435 92713
No. 6/14, Maruthi Nagar,
Mangadu, Chennai - 144

# பெண்களுக்குப் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் தருவது யார்?

**- உம்மு ரய்யான்**

ஹிஜ்ரி 20இல் முஸ்லிம்கள் எகிப்தைக் கைப்பற்றினார்கள். அதன் ஆளுநராக இருந்த அம்ரு பின் அல்ஆஸ்(ரலி) அவர்களிடம் கிறித்தவத் தலைவர்கள் வந்தார்கள். நைல் நதியில் நீர் குறையும் போது தங்கள் ஊரில் மிகவும் அழகான கன்னிப் பெண்களை நதியிலே வீசிக்கொல்லும் வழக்கத்தைக் கூறி பலி கொடுக்கச் சொன்னார்கள்.

அம்ரு பின் அல்ஆஸ்(ரலி) அவர்கள் அதைத் தடுக்க முயன்ற போது மத புரோகிதர்கள், ‘இது எங்கள் மதச் சுதந்திரம். இதைத் தடை செய்யக்கூடாது’ என்று எதிர்த்தார்கள். இந்த செய்தி உமர்(ரலி) அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

மத உரிமைகளை மதிக்கும் மார்க்கம் இஸ்லாம். எனினும் சுதந்திரம் என்பதற்கு ஒரு வரைமுறை இருக்கிறது. உனக்குக் கைவீசி நடக்க சுதந்திரம் உண்டு. ஆனால் உன் கை அடுத்தவர் கண்ணைக் குத்தாமல் இருக்க வேண்டும். மத உரிமை என்ற பெயரில் பெண்களைக் கொடூரமாகக் கொல்வதை ஏற்க முடியாது என்று அந்த மூடப் பழக்கத்தைத் தடை செய்தார்கள். மரண பயத்தில் தவித்த எகிப்தின் கன்னிப்பெண்கள் அன்றுதான் விடுதலைப் பெருமூச்சு விட்டார்கள்.

‘..அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே உங்கள் துணையைப் படைத்தான்; நீங்கள் அவர்களிடம் அமைதி பெறவேண்டும் என்பதற்காக! மேலும், உங்களிடையே அன்பையும், கருணையையும் தோற்றுவித்தான்’(திருக்குர்ஆன் 30:21)

‘உம் அதிபதி விதித்துள்ளான்: அவனைத் தவிர வேறெவரையும் நீங்கள் வணங்காதீர்கள். தாய் தந்தையரிடம் மிக கண்ணியமான முறையில் நடந்துகொள்ளுங்கள். பெற்றோரில் ஒருவரோ இருவருமோ முதுமையை அடைந்துவிட்ட நிலையில் உம்மிடம் இருந்தால், அவர்களை ‘சீ’ என்று கூடக் கூறாதீர்! மேலும், அவர்களைக் கடிந்து பேசாதீர்! மாறாக, அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக!

மேலும், பணிவுடனும், கருணையுடனும் அவர்களிடம் நடந்து கொள்வீராக! மேலும், நீர் இறைஞ்சிய வண்ணம் இருப்பீராக: ‘என் இறைவனே! சிறு வயதில் எவ்வாறு என்னை இவர்கள் கருணையுடனும் பாசத்துடனும் வளர்த்தார்களோ அவ்வாறு இவர்கள் மீது நீ கருணை புரிவாயாக!’ (திருக்குர்ஆன் 17:23,24)



இஸ்லாம் பெண்களுக்கான மரியாதையையும், கண்ணியத்தையும் கட்டளையாகப் பிறப்பித்துள்ளது. அன்றைய காலம் பெண் குழந்தைகள் பிறப்பதை அவமானமாகக் கருதி வந்த காலம். பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்த காலம். அந்தக் காலகட்டத்தில்தான் இஸ்லாம் பெண்களின் விடுதலை மார்க்கமாகத் திகழ்ந்தது. அன்றைய சூழலைத் திருமறைக் குர்ஆன் எடுத்தியம்புகிறது.

‘இவர்களில் ஒருவருக்குப் பெண் குழந்தை (பிறந்திருப்பது) பற்றி நற்செய்தி சொல்லப் பட்டால், அவரது முகத்தில் கருமை கவ்விக் கொள்கின்றது! துக்கத்தால் அவர் தொண்டை அடைத்துக் கொள்கிறது’ (திருக்குர்ஆன் 16:58)

‘இவ்வாறே இணைவைப்பாளர்களில் பலருக்குத் தங்கள் குழந்தைகளைத் (தாங்களே) கொலை செய்வதை அவர்களுடைய இணைத் தெய்வங்கள் அழகாக்கினார்கள்’ (திருக் குர்ஆன் 6:137)

இஸ்லாம் மட்டுமே பெண்களைக் கண்ணி யப்படுத்துகிறது. ‘தாயின் காலடியில் சுவனம் உள்ளது’ என்று சொன்னது. தாயை ‘சீ’ என்று கூட சொல்லாதே!’ எனக் கட்டளையிட்டது. ‘தன் மனைவியிடத்தில் சிறந்தவனே உங்களில் சிறந்தவன்’ என்று பெருமைப்படுத்தியது. ‘பெண் குழந்தை பிறந்தால் வானவர்கள் வருகை தருகிறார்கள்’ என்று பெண் குழந்தை பிறப்பதைச் சுபச் செய்தியாக அறிவித்தது. பெண் குழந்தை பெற்று வளர்த்தால் சுவனம் கிடைக்கும் என்ற நற்செய்தியைச் சொல்கிறது.

இவ்வாறு பெண்களை மதித்தது இஸ்லாம் தான். உலகில் பெண்களுக்குப் பாதுகாப்பான மார்க்கம் இஸ்லாம் மட்டுமே. சகலவிதமான பாதுகாப்புகளையும் கண்ணியத்தையும் அனுபவிக்கும் ஒவ்வொரு இஸ்லாமியப் பெண்களும் மார்க்கம் தந்த உரிமைகளைப் பயன்படுத்துவதுடன் சரிவரக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பிறப்புரிமை, உயிர் வாழும் உரிமை, கல்வி உரிமை, வேதம் கற்கும், கற்பிக்கும் உரிமை, பொருளீட்டும் உரிமை, சொத்துரிமை, கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, கணவனிட மிருந்து விவாகரத்துப் பெறும் உரிமை, மறுமண உரிமை என்று இஸ்லாம் வழங்கியுள்ள உரிமைகளை இந்த மகளிர் தினத்தில் (மார்ச் 8) அனைவரும் காய்தல் உவத்தல் இன்றி ஆய்வு செய்வது பொருத்தமானதாக இருக்கும்.



43 ஆண்டுகளாக ஒழுக்கத்துடன் கூடிய சீரிய கல்விப்பணியில்...

# அல்-அமீன் பொறியியல் கல்லூரி

(AUTONOMOUS - தன்னாட்சி அந்தஸ்து)

# பாலிடெக்னிக் கல்லூரி

NAAC 'A' GRADE

NBA

[APPROVED BY AICTE, NEW DELHI, AFFILIATED TO ANNA UNIVERSITY, CHENNAI & GOVERNMENT OF TAMILNADU] Run By : AL-AMEEN EDUCATIONAL AND CHARITABLE TRUST

கருந்தேவன்பாளையம், (ஈரோடு-முத்தூர் ரோடு), நஞ்சை ஊத்துக்குளி (Po), ஈரோடு - 638104.

2026-2027 ஆம் கல்வி ஆண்டிற்கு முதலாம் ஆண்டு மற்றும் நேரடி இரண்டாம் ஆண்டு அட்மிஷன் நடைபெறுகிறது.

Engg - 96777 61786, Poly - 99427 92232

TNEA 2652

**B.E.,** CSE | MECH | EEE | ECE **B.Tech.,** IT | AI&DS

**M.E.,** CSE | Industrial Safety Engineering

**MBA** Master of Business Administration 2 Years

**Ph.D.,** ECE

**DIPLOMA IN :** MECH | AUTO | EEE | COMPUTER

## இரு கல்லூரிகளின் சிறப்பு அம்சங்கள்

- கல்லூரி பள்ளிவாசலில் ஐவேளை தொழுகை, ஜும்ஆ தொழுகை, ரமலான் மாதங்களில் சஹர், இப்தார் வசதி, தராவீஹ் தொழுகை மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு பேருந்து, பாதுகாப்பான தனித்தனி விடுதி வசதிகள் உண்டு.
- உலமாக்கள், முஅத்தீன்கள், விதவைகள், கடைகளில் பணிபுரிபவர்கள் மற்றும் எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்களின் பிள்ளைகள் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் ஏழைத் தொழிலாளர்களின் பிள்ளைகள் இக்கல்லூரியில் தங்கி பயில்வதற்கு நிர்வாகத்தினரால் கீழ்க்கண்ட சிறப்புக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது.

**பாலிடெக்னிக் கல்லூரி - ரூ. 6,000 X 12 மாதங்கள் = ரூ. 72,000/**

**இன்ஜினியரிங் கல்லூரி - ரூ. 7,000 X 12 மாதங்கள் = ரூ. 84,000/**

(ஒரு வருடத்திற்கு கல்லூரி கட்டணம், விடுதி & உணவு கட்டணம் உட்பட)

## CAMPUS INTERVIEW மூலம் வேலைவாய்ப்பு வழங்கிய நிறுவனங்கள் ...

| அல்-அமீன் பொறியியல் கல்லூரி | அல்-அமீன் பாலிடெக்னிக் கல்லூரி |
|---|---|
| TOTAL OFFERS - 102* \| HIGHEST SALARY - 07.00 LPA* | TOTAL OFFERS - 254* \| HIGHEST SALARY -2.6 LPA* |
| AVERAGE SALARY - 2.40 LPA | AVERAGE SALARY - 2.0 LPA |
| No of Companies visited - 22* | No of Companies visited - 14* |

tcs, Infosys, HEXAWARE, MALLOW, maventic, Chella Software, SKYRAAN, INFINITI, propel, AGGREGATE INTELLIGENCE, Blod.in, BLITZWORKS, JILABA, NISSI, MCoreta, Q-GATE, NOKIA, MRF, TATA, LMW, RENAULT NISSAN, TVS, BRIGHT, WIND WORLD, YAMAHA, SCHAEFFLER

அட்மிஷன் தொடர்புக்கு : ENGG: 98420 22458 POLY : 94869 32767

# Unity Public School

( Affiliated to CBSE upto Class XII, Affiliation No: 1930241 )

**A Cradle for Good Etiquettes**

*A Great Opportunity for your beloved Children to learn both Islam and Formal Education*

**Our Vision**

*To Groom Children who will be Academically Intelligent*
*Morally Sound, Emotionally Strong, Physically Vibrant and God-Fearing.*

- CBSE Curriculum to take care of Academics
- Sports, Games and Taek Wondo to take care of Physical Education
- Values-Based Holistic Curriculum & vLead (Leadership/Personality Development) to take care of Character Education
- State-of-the-Art Labs & Activity Rooms
- Indoor and Outdoor Games Facility
- Air-Conditioned Auditoriums & Masjid




No. 109, Lakeview Rd, Kottur, Chennai-85 | Ph: 044-24451233, 24451244 | Email: unitypublic@unityschool.in

www.unitypublicschool.com



# ரமளான் உருவாக்குகின்ற முத்தான மூன்று பண்புகள்


● சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி

அகில இந்தியத் தலைவர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்


நோன்பின் முதன்மை நோக்கம் இறையச்சத்தைப் பெறுவதுதான் என்று அருள் மறை அறிவிக்கின்றது. ரமளான், நோன்பு ஆகியவற்றை ஆழ்ந்து பார்க்கின்ற போது நோன்பின் மூலமாக இறையச்சம் எப்படி செழித்தோங்குகின்றது என்பதை நம்மால் கணிக்க முடிகின்றது.

ரமளானும் நோன்பும் மனிதனுக்குள்ளும் மனித சமூகங்களிலும் மூன்று முக்கியமான மலர்ச்சிகளையும் சிறப்புகளையும் தோற்றுவிக்கின்றன. செழித்து வளரச் செய்கின்றன. அவை (1) ஆன்மாவின் இனிமை (2) நிதானமும் பொறுமையும் (3) எதனையும் செய்து முடிக்கின்ற தீர்மானமான எண்ணம், மனஉறுதி. இறையச்சம் நிறைந்த வாழ்வாக நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இந்த மூன்றுமே தேவைப்படுகின்றன.

## ஆன்மாவின் இனிமை

ஆன்மாவின் இனிமை என்றால் என்ன? நோன்பின் மூலமாக மனிதன் உடல் இன்பங்களைக் காட்டிலும் ஆன்மாவின் இன்பங்களை உணர்கின்றான்.

இந்த உடலின் இன்பங்களும், உடலின் இனிமைகளும், உடலின் சொகுசுகளும், உல்லாசங்களும்தாம் எல்லாமே என்பதல்ல என்கிற திடமான நம்பிக்கை அவனுக்குள் உருவாகிவிடுகின்றது. பசியுள்ள வயிற்றோடும், தாகத்தால் வறண்டு போன தொண்டையோடும் அல்லாஹ்வின் இல்லத்துக்குள் நுழைகின்ற போதும், அவனுக்கு முன்னால் பணிந்து நிற்கின்ற போதும், சிரம் தாழ்த்தி வழிபடுகின்ற போதும் கிடைக்கின்ற இனிமைக்கும் ஏகாந்தத்துக்கும் ஈடு இல்லை என்பதை அவன் ருசித்து உணர்கின்றான்.

இறைநம்பிக்கையாளனுக்கு இந்த இனிமையும் சுவையும் இந்த மாதத்தில் நல்ல முறையில் அறிமுகமாகி விடுகின்றன. ஒட்டுமொத்த மாதத்தையும் இறைவனுக்கு வழிபடுகின்ற உணர்வில் கழித்தும், திளைத்தும், இரவுகளில் இறைவனின் மன்றத்தில் நின்றும், குர்ஆனை ஓதி மகிழ்ந்தும், திக்ரு, துஆக்களில் மனத்தை நனைத்தும் அவன் தன்னுடைய ஆன்மாவை லேசானதாய், பாரமே இல்லாததாய் ஆக்கிக் கொள்கின்றான்.

தவ்பா - பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்கிற மன்றாட்டங்கள்

மூலமாகவும் அவன் தன்னுடைய ஆன்மாவை எல்லாவிதமான அழுக்கு களிலிருந்தும் கறைகளிலிருந்தும் அப்பாற் பட்டதாய் ஆக்கிக் கொள்கின்றான். இறை வனின் உவப்பைப் பெற வேண்டும் என்கிற ஒற்றைக் கவலையோடும் நோக்கத்து டனும் அவன் பசியோடும் தாகத்தோடும் கழித்த நீளமான அவகாசங்களும் நீண்ட தருணங்களும் இறைவனுக்கு முன்னால் சிரம் பணிவதால் கிடைக்கின்ற சுகத்தையும் சுவையையும் உணர்த்தி விடுகின்றன.

## பொறுமையும் நிதானமும்

ரமளான் மாதம் பொறுமையின் மாதம் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. வெளி யிலிருந்து தொடுக்கப்படுகின்ற அத்தனை அழுத்தங்களையும் மீறி, தன் மனத்துக்குள் முட்டி மோதுகின்ற அத்துணை இழுப்பு களையும் தாண்டி, தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் கீழ் உறுதியாக நிலைத்து நிற்பதற்குப் பெயர் தான் பொறுமை. ரமளான் கற்பிக்கின்ற மிக முக்கியமான பாடமும் இது தான்.

வெளியுலகத்தின் கோலாகலங்களும் ஆர வாரங்களும் என்னதான் மனத்தை ஈர்க்கக் கூடியதாக இருந்தாலும், சூழலும் பருவமும் என்னதான் மோசமானதாய் பேயாட்டம் போட்டாலும், உலகத்தின் வனப்புகளும் அழகுகளும் என்னதான் அளப்பரிய அலங் காரங்களுடன் சுண்டியிழுத்தாலும் இறைவன் மீது நம்பிக்கை கொண்ட முஃமின் அவை யாதொன்றின் பக்கமும் ஏறெடுத்தும் பார்ப்ப தில்லை. அதற்கு மாறாக இறைவனின் விருப்பத்தின் படி தன்னுடைய ஒவ்வொரு அசைவையும் செயலையும் நெறிப்படுத்திக் கொள்வதில்தான் அவனுடைய ஒட்டு மொத்த கவனமும் அக்கறையும் குவிந்து நிற்கின்றன.

இதே போன்று அவனுக்குள் முட்டி மோது கின்ற ஆசைகளும் ஏக்கங்களும் என்னதான் பேருருவம் எடுத்தாலும் பசியும் தாகமும் மிகப் பெரும் அளவில் துளைத்தெடுத்தாலும் மோகமும் ஆசையும் கிளர்ந்தெழுந்தாலும் மனத்துக்குப் பிடித்தமான ருசியான, சுவை யான உணவுவகைகளும் தின்பண்டங்களும் பானங்களும் இனிப்புகளும் கண் முன்னால் பரத்தி வைக்கப்பட்டாலும் ஒரு முஸ்லிம் இறைவனின் திருப்தியைப் பெற வேண்டும் என்கிற ஒற்றை நோக்கத்துடனும் உணர்வு டனும் எல்லாவகையான ஆசைகள் மீதும், மோகங்கள் மீதும் உறுதியான கடிவாளம் இடுகின்றான்.

மற்றவர்களின் செயல்களுக்கு எதிர்வினை யாற்றுவதைக் காட்டிலும், புற உலகச் செயல் பாடுகளின் படி தம்மை தகவமைத்துக் கொள்வதைக் காட்டிலும் தம்முடைய கொள் கைகளின் படியும் தாம் ஏற்றுக் கொண் டிருக்கின்ற நம்பிக்கைகளின்படியும் இயங்கு கின்றவர்கள்தாம் இந்த உலகத்தில் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

வெற்றியாளர்களாக முத்திரை பதித்த அனைவரிடமும் இருக்கின்ற இன்றியமை யாத பண்பும் இதுதான்.

இந்த மாதமும் இறைநம்பிக்கையாள னிடம் முன்முயற்சி எடுத்து முனைப்புடன் இயங்குகின்ற திறனை, கொள்கைகளின் படி செயலாற்றுகின்ற பண்பை உருவாக்குகின்றது. அவனுடைய எந்தவொரு செயலும் வெளிப் புறஉலகத்தின் அழுத்தங்களால் நடப்ப தில்லை. மேலும் அவனுக்குள் கிளறுகின்ற இழுப்புகளின் விளைவாகவும் அவை இருப்ப தில்லை.

ரமளானில் எந்தவொரு வேலையையும் நாம் மற்றவர்களுக்கு எதிர்வினையாற்று கின்ற விதத்தில் செய்வதில்லை. அதற்கு மாறாக, நாம் மேற்கொள்கின்ற ஒவ்வொரு செயலையும் நல்லறத்தையும் நம்முடைய கொள்கைகளின் அடிப்படையில்தான் செய் கின்றோம். இவ்வாறாக நம்முடைய கொள் கைகளில் மலை போன்று உறுதியாக நிலைத்து நிற்பதற்கான, நம்முடைய நோக்கங்களுக்காக முனைப்புடன் செய லாற்றுவதற்கான பயிற்சியை நாம் இந்த

மாதத்தில் பெறுகின்றோம். இதற்காகத் தேவையான பொறுமையையும் நிதானத்தையும் சகிப்புத் தன்மையையும் வளர்த்துக் கொள்கின்றோம்.

## மன உறுதி

மிக மிகச் சிரமமான தீர்மானங்களை எடுப்பதற்கான, அவற்றை அழகிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சியும் நமக்கு இந்த மாதத்தில் வழங்கப்படுகின்றது. ரமளான் தொடங்கியதுமே ஒவ்வொரு முஸ்லிமும் இனி தாம் விழித்தெழுகின்ற நேரத்தை மாற்றிவிடுகின்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்கின்றான்.

உலகம் முழுவதும் இருக்கின்ற கோடிக் கணக்கான முஸ்லிம் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் முதியோரும் இனி இந்தத் மாதம் முழுவதும் அதிகாலை மூன்று மணிக்கே அல்லது நான்கு மணிக்கே விழித்தெழுந்து விடுவோம் என்று தீர்மானிக்கின்றார்கள். நாம் எல்லோருமே மாதம் முழுக்க இந்தத் தீர்மானத்தில் உறுதியாக நின்று நடைமுறைப்படுத்துகின்றோம். மேலும் நம்மில் ஒவ்வொருவரும் இனி நாள்தோறும் இத்துணை நிமிடங்கள் குர்ஆன் ஓதுவதில் கழியும் என்று தீர்மானிக்கின்றார்கள். நடைமுறைப்படுத்துகின்றார்கள்.

இந்த மாதத்தில் உலகம் முழுவதும் முஸ்லிம்கள் மிகவும் சிரமமான அதேசமயம் மிகவும் வலுவான மலை போன்று உறுதியான தீர்மானம் ஒன்றை ஒவ்வொரு நாளும் அதிகாலைப் பொழுதில் ‘இறைவா மன்னித்தருள்வாயாக’ என்கிற பிரார்த்தனை செய்கின்றார்கள். நாள் முழுக்க எதனையும் உண்ணவோ பருகவோ மாட்டோம் என்கிற தீர்மானம் தான் அது. தாகத்தால் நா வறண்டு துவண்டு போனாலும் சரி, பசி மயக்கத்தால் முடங்கிப் போனாலும் சரி, உலகத்தின் எந்தவொரு சக்தியாலும் அவர்களை இந்தத் தீர்மானத்திலிருந்து விலகச் செய்ய முடிவ தில்லை.

இந்த வேளையில் நம் எல்லோருக்கும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்துக்கும் இந்த மூன்றுமே மிக மிக இன்றியமையாத தேவைகளாய் இருக்கின்றன. இந்த உலகத்தில் நமக்கு வெற்றியும் வளமும் கிடைக்க வேண்டுமானாலும் இந்த மூன்றுதான் கட்டாயத் தேவைகளாய் இருக்கின்றன. மறுமை வெற்றிக்கும் இவை மட்டும்தான் துணை நிற்கும்.

பசியும் தாகமும் மட்டுமே நம்மை உந்தித் தள்ளுகின்ற அழுத்தங்களாய், மோகங்களாய் இருப்பதில்லை. அவற்றுக்கும் மேலாக இந்த உலகத்தில் முஸ்லிம்களையும் முஃமின்களையும் ஷைத்தானும் ஷைத்தானிய சக்திகளும் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு கோலங்களில் வடிவெடுத்து உந்தித் தள்ளவும் அழுத்தம் கொடுப்பதற்கும் இழுத்துச் சாய்ப்பதற்கும் முயல்கின்றன. வகை வகையான மாய வலைகளை விரித்து சிக்க வைக்க முயல்கின்றன.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் இவையனைத்தையும் புறந்தள்ளிவிட்டு கொண்ட கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்பதும், தம்முடைய அசல் நோக்கத்தில் உறுதியாக இருப்பதும், தம்முடைய பாதையில் தொடர்ந்து நடைபோடுவதும், நிலைமைகளுக்கு எதிர்வினையாற்றுவதற்குப் பதிலாக முன் முயற்சி எடுத்து இயங்குவதும் இன்றைய முஸ்லிம் சமுதாயத்துக்கு மிகவும் தேவைப்படுகின்ற பண்புகளாகும். இந்தப் பண்புகளைத்தான் ரமளானும் நோன்பும் உருவாக்குகின்றன.

இந்த மாதத்தை இதன் உண்மையான நோக்கங்களைக் கருத்தில் கொண்டு சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வோம். உண்மையான தக்வா என்கிற இறையச்சம் நிறைந்த மனோபாவத்தை உருவாக்கிக் கொள்வதற்கு இந்த மாதத்தைச் செம்மையாகப் பயன்படுத்திக் கொள்வோம்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நற்பேற்றையும் வசதியையும் வாய்ப்பையும் தந்தருள்வானாக. ஆமீன்.



7871 880088
Go Buttons®
Get Stylish. Stay Young.
FREE Gifts
STONE SHIRTS
FROM RS.599*
Ramadan SALE
RAMZAN COMBO
2 SHIRTS + 1 PANT
RS.1000*
Instagram/buttonsindia
*T&C
20+ Branches
AMINJIKARAI | NOLAMBUR | VALASARAVAKKAM | AMBATTUR | AVADI | REDHILLS | KELAMBAKKAM
GUMMIDIPOONDI | UTHUKOTTAI | ARAKKONAM | ARCOT | GINGEE | THIRUPATHUR | DHARMAPURI
PANRUTI | PERAMBALUR | THIRUTHURAIPOONDI | RAMANATHAPURAM | UDUMALAIPETTAI




**SABENA SEALERS**
www.sabenapackaging.com

*Innovating the Future of Packaging*

**SABENA SEALERS**
Plot C, 163/4C&5B 2B, Redhills Andarkuppam Road,
Theeyambakkam, Chennai - 600 060.
Contact : +919429693364
sales@sabenapackaging.com sabenasealers@gmail.com
www.sabenapackaging.com | www.sabenapack.store

Scan for Contact
Scan for Location
scan to buy online

# HIJAZ
## LEATHERS PVT. LTD.,

**Tanners & Exporters of Finished Leathers & Fashion Gloves**

**HEAD OFFICE :**
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

**TANNERY :**
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

**GLOVE FACTORY :**
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

Digital Hub

unit of The Chennai Mobiles




The Chennai Mobiles®

99444 12345, 89405 12345 | www.thechennaimobiles.com

# கொடை

● **சாந்த் உஸ்மானி**

ஜகாத், ஸதகா, இன்பாஃக் பீ ஸபிலில்லாஹ் யாவும் கொடை. அல்லாஹ் வுடைய உதவியைப் பெற நாம் அல்லாஹ்வுக்காகக் கொடுக்கக்கூடிய கொடை. அல்லாஹ்வுக்காகக் கொடுத்தல், அல்லாஹ்வுக்காகத் தர்மம் செய்தல், அல்லாஹ்வுக்காக வாரி வழங்குதல் ஆகியவற்றையே இந்தக் கொடைகள் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

‘அவர்கள் மறைவானவற்றைக் கொண்டு ஈமான் கொண்டிருப்பார்கள், தொழு கையைக் கடைப்பிடித்து வருவார்கள், நாம் கொடுத்தவற்றிலிருந்து செலவும் செய் வார்கள்’ என்கிறது திருமறைக் குர்ஆன். இறைவன் கொடுத்தவற்றில் இருந்து செலவு செய்வது தான் கொடை.

அல்லாஹ் ஒரு மனிதனுக்கு எதை எல்லாம் வழங்கி இருக்கிறானோ அதிலிருந்து செலவு செய்வது கொடை. நம்மில் பலர் காசு பணம் மட்டுமே கொடை என்று தவறாக விளங்கி வைத்திருக்கின்றோம் . நமக்குக் கிடைத்திருக்கின்ற எல்லாமே கொடைதான். கல்வி ஞானம், சிறந்த மனைவி, கணவன், பிள்ளைகள், தொழில் செய்யும் ஆற்றல், பொருளாதார பலம் எனப் பல திறமைகளையும் ஆற்றல்களையும் அல்லாஹ் நமக்குக் கொடையாகக் கொடுத்திருக்கின்றான்.

ஆனால் வசதி படைத்தவர்கள் மட்டும்தான் ஸதகா தர்மம் போன்ற கொடை களைச் செய்ய முடியும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். எல்லா நிலையிலும் எல்லோராலும் செய்யக் கூடிய நற்செயல்தான் கொடை.

ஒருவரிடத்தில் அறியாமை, மடமை என்ற வறுமை இருக்கிறது என்றால் அதை நீக்க ஒரு தூண்டுகோலாக நாம் இருந்தாலும் அதுவும் அல்லாஹ்வுக்காகச் செய்யக் கூடிய ஒரு கொடை என்றுதான் கருதப்படுகின்றது.

மக்களிடையே ஆன்மிகத்திலும் வறுமை காணப்படுகின்றது. அதாவது அவர் களிடத்தில் பொருளாதாரம் உச்சத்தில் இருக்கும். ஆனால் தொழுகை, திக்ர், குர்ஆன் ஓதுதல், தர்மம், ஸதகா எதுவுமே இல்லாமல் இருப்பது ஆன்மிக வறுமை என்று கருதப்படுகிறது. இந்த வறுமையைப் போக்குவதும் ஒரு கொடை தான்.

நபித்தோழர்கள் எல்லோரும் தர்மம் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். சிலரிடத்தில் காசு பணம் இருந்தது. வசதி வாய்ப்புகள் இல்லாதவர்களும் கொடுக்கத் தான் செய்தார்கள். தர்மம் என்பது பரந்துப்பட்ட பொருளைக் கொண்டது.

கொடை கொடுப்பதற்கு அடிப்படையாக நமக்குத் தேவைப்படுவது தர்ம உணர்வும் தர்ம சிந்தனையும். கொடை கொடுத்தலுக்கு முன்னால் நம்மிடத்தில் இந்த

உணர்வுகள் இருந்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். எப்போதும் எந்நேரமும் அல்லாஹ்வுக்காக நாம் கொடுக்கக் கூடிய வர்களாக இருக்க வேண்டும் என்ற தர்ம உணர்வை இஸ்லாம் நம்மிடத்தில் எதிர்பார்க் கின்றது.

'உபரியான வணக்கங்களைக் கொண்டு என்னுடைய அடியான் என்னை நெருங்கு கின்றான்' என்று இறைவன் கூறுகின்றான். உபரியான வணக்கங்கள் என்பது நாம் செய்யக்கூடிய தர்மங்கள். அது, பொருளாதார உதவியாக இருக்கலாம், அறிவு சார்ந்த விஷயமாக இருக்கலாம், நல்ல பேச்சு வார்த் தைகளாக இருக்கலாம். அல்லது அடுத்த மனிதனுடைய உள்ளத்தை மகிழ்விக்கின்ற ஒரு வார்த்தையாகக் கூட இருக்கலாம். இது எல்லாமே நாம் கொடுக்கக்கூடிய கொடை. இந்த விஷயங்கள் எல்லாமே நம்மை அல்லாஹ்விடத்தில் நெருக்கி வைக்கக் கூடியதாக இருப்பதோடு அல்லாஹ்வுடைய உதவியையும் அன்பையும் நமக்குப் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும்.

கொடை என்பது உணர்வு மிகுதியால் பொங்கி எழுகின்ற உணர்வு அல்ல. அறிவால் உந்தப்பட்டு நல்ல எண்ணங்களாக உருவாகி அந்த எண்ணம் செயல்பாடுகளாக மாறுவது தான் கொடை என்ற சிந்தனை. இந்தப் பண்புகள் எல்லாம் நபித்தோழர்களிடம் இருந்தது.

**கொடை கொடுப்பதற்கு அடிப்படையாக நமக்குத் தேவைப்படுவது தர்ம உணர்வும் தர்ம சிந்தனையும். கொடை கொடுத்தலுக்கு முன்னால் நம்மிடத்தில் இந்த உணர்வுகள் இருந்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும்.**




முத்தகீன்கள் யார் என்று இறைவன் சொல்கின்ற போது 'அவர்கள் எத்தகையோர் எனில் வசதி உள்ள நிலையிலும் வசதி யற்ற நிலையிலும் செலவழிப்பார்கள்' என்று குறிப்பிடுகின்றான். இந்த வசனத்தி லிருந்து பொருளாதார வசதியான, வசதியற்ற நிலையிலும் அல்லாஹ்வுக்காகக் கொடுப் பார்கள். இங்கு எண்ணிக்கை முக்கியமில்லை. அல்லாஹ் நம்மிடத்தில் எண்ணத்தைப் பார்க்கக் கூடியவனாக இருக்கின்றான். ஒரு மனிதனுக்குத் தேவைப்படுகின்ற பொழுது சிறு தொகையாக இருந்தாலும் உரிய நேரத்தில் கொடுப்பது மிகப்பெரிய தர்ம மாகக் கருதப்படுகின்றது.

இந்த உணர்வு நபித்தோழர்களிடம் இருந் தது. அவர்கள் சேமித்து வைப்பதில் போட்டி போடவில்லை. கொடுப்பதில்தான் போட்டி போடக்கூடியவர்களாக இருந்திருக்கின்றார்கள். நமக்குப் பல வரலாற்றுச் சம்பவங்கள் படிப் பினையாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தப் படிப்பினைகளைச் செயல்படுத்தக்கூடிய ஒரு சிறப்பான மாதம் ரமளான். இந்த மாதத்தில் நாம் அதிகம் அதிகமாக இறைவனுக்காகக் கொடுத்து இறைவனுடைய அன்பைப் பெறுவோமாக!

# ஜன்சேவா

கோஆப்ரேடிவ் கிரெடிட் சொசைட்டி லிமிடெட்

**JANSEVA**

MAKING MONEY MORAL

(REGISTERED NO.MSCS / CR/335 / 2010)

- உங்களுக்காக
- உங்கள் மூலம்
- உங்கள் கனவுகள் நிறைவேற

பரஸ்பர உதவியின் மூலம் பொருளாதார பிரச்சனைகளுக்கான தீர்வு

இன்றே பணத்தை செலுத்தி உங்களின் எதிர்கால தேவைகளை நிறைவேற்றமுடியும். மேலும் தேவையுடையவர்களுக்கும் உதவி புரியவும் இயலும்

★ வீடு கட்ட
★ வாகனம் வாங்க
★ ஜகாத் நிறைவேற்ற
★ திருமணம் Scheme
★ குர்பானி Scheme
★ இறை இல்லமான காபாவிற்கு செல்ல
★ வியாபாரத்தை தொடங்க, வியாபார வளர்ச்சிக்காக
★ பிள்ளைகளின் தரமான கல்விக்கு வழிவகுக்க

ஜன்சேவா உங்களுக்கு துணை நிற்கிறது

## ஜன்சேவாவில்

வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும்

## வட்டியில்லா பொருளாதாரம் மற்றும் முதலீடு

| 72 MONTHS PLAN | |
|---|---|
| Monthly Saving Scheme | |
| SAVE | GET* APPROXIMATELY |
| 500 | 50,000 |
| 1000 | 1,00,000 |
| 2500 | 2,50,000 |
| 5000 | 5,00,000 |
| 10,000 | 10,00,000 |

| 7 YEARS PLAN | |
|---|---|
| Yearly Saving Scheme | |
| SAVE | GET* APPROXIMATELY |
| 5,000 | 50,000 |
| 10,000 | 1 Lakh |
| 25,000 | 2.5 Lakh |
| 50,000 | 5 Lakh |
| 1,00,000 | 10 Lakhs |







82/324 PACHAYAPPAN STREET, TRIPLICANE HIGH ROAD, TRIPLICANE, CHENNAI -600005

**Contact : 90471 30924 / 9944398268**



ரமளான் மாதம் எத்தகையதென்றால், அம்மாதத்தில்தான் மனிதர்களுக்கு (முழுமையான) வழிகாட்டியாகவும், மேலும் நேர்வழியின் தெளிவான அறிவுரைகளைக் கொண்டதும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக்கூடியதுமான குர்ஆன் இறக்கியருளப்பட்டது. எனவே இனி உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் எவரேனும் நோயாளியாகவோ, பயணத்திலோ இருந்தால், அவர் மற்ற நாட்களில் கணக்கிட்டு நோன்பு நோற்றிட வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவை விரும்புகின்றான். அவன் உங்களுக்குக் கஷ்டத்தைத் தர விரும்பவில்லை. (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் நிறைவு செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களை நேரிய வழியில் செலுத்தியதற்காக நீங்கள் அவனுடைய மேன்மையைப் போற்றி அவனுக்கு நன்றி பாராட்டுவதற்காகவுமே (இவ்வழி உங்களுக்குக் காண்பிக்கப்படுகிறது!)

(திருக்குர்ஆன் 2:185)

*With Best Compliments of*

**Dr. HAJA K. MAJEED M.B.B.S., F.A.G.E.**

**Dr. ABDUL MAJEED ARSHAD M.D.,**
**Pulmonologist**

# Mariam Diagnostic Centre
# Mariam Pulmo Care

New No. 19-A, Old No. 8, Thiruvalluvar Salai, Teynampet, Chennai - 600 018.
Ph : 2433 1034 / 35 / 37 Fax : 91-44-2433 1036
Email : mariamdiagonsticcentre@gmail.com Website : mariamdc.com


Fathima
JEWELLERS
916 HALL MARKED
100%
மிகச் சிறந்த நகைகள்
மிகக் குறைந்த சேதாரம்
பாத்திமா ஜுவல்லர்ஸ்
தி.நகர் :
71, உஸ்மான் ரோடு,
சென்னை-17. Ph: 42966000
பாரிமுனை :
23, N.S.C. போஸ் ரோடு,
சென்னை-79. Ph: 25351070
புரசைவாக்கம் :
42, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-7. Ph: 42966333
தி.நகர் மற்றும் புரசையில் கடையுடன் இணைந்த பிரத்யேக கார் பார்க்கிங் வசதி உள்ளது
எங்களது "கோல்டன் கிரைன்ஸ்" சேதாரமில்லா சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்



# ரமளான் கவிதைகள்

**- லத்தீஃபா இக்பால் மைந்தன்**

வாழ்க்கைப் பக்கங்களில்
எழுதிய பிழைகளை
அழிக்கும்
அழிப்பான்
ரமளான்

செல்வத்தின்
அழுக்கைப் போக்கும்
வாஷிங் மிஷின்
ஜகாத்

இஸ்லாமியப்
பள்ளியின்
ஆண்டுத் தேர்வு
ரமளான்

பாதி ரொட்டியைத்
தான் தின்று
மீதி ரொட்டியை
பகிர்ந்தளிக்கும்
ஃபலஸ்தீன
நோன்பாளியின்
வயிற்றை நிரப்பும்
இறைவனின் பேரன்பு

அருள்வளத்தை
அள்ளி எடுக்க
பொருள் வளத்தைக்
கிள்ளியாவது
கொடுப்போம்

பசியோடும் தாகத்தோடும்
நாளெல்லாம் காத்திருந்து
சேர்த்துவைத்த
புண்ணியங்களை
புறம் பேசிக் கெடுக்காதீர்
பொய் பேசிச் சிதைக்காதீர்

ரமளானை வரவேற்க
ஆவலோடு
காத்திருக்கிறார்
எலுமிச்சை விற்கும்
வண்டிக்காரர்

# சமரசம் புதிர் போட்டி 5

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை **2026 மார்ச் 13**ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, **73050 40386** என்ற வாட்ஸ்அப் எண்ணிலோ, **samarasam.article@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அனுப்பவும்.

1. ‘வானங்கள், பூமியின் ஆட்சி அதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது என்பதையும் அவனைத் தவிர வேறு எந்தப் பாதுகாவலனும் உதவியாளனும் உங்களுக்கு இல்லை என்பதை நீங்கள் அறியவில்லையா?’ இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அந் நூர் ஆ) அல்பகரா

2. ‘நீ நோன்பு நோற்றால் உனது செவிகள், கண்கள், நாவு ஆகியவையும் பொய், பாவமான காரியங்களை விட்டும் நோன்பு நோற்கட்டும்’ இந்த நபிமொழியை அறிவித்தவர்

   அ) அபூ ஹுரைரா(ரலி) ஆ) ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்(ரலி)

3. நோன்பாளிகளைத் தவிர வேறு எவரும் இந்த வாசல் வழியாக சுவனத்திற்குள் நுழைய மாட்டார்கள்.

   அ) ரய்யான் ஆ) ஸவ்ம்

4. ‘ஒவ்வொரு பகுதிக்கும் குறைந்தது ஐந்துபேர் கொண்ட குழுவை அமைத்து, அவர்கள் ஜகாத்தைச் சேகரித்து, ஒழுங்கமைத்து, முழுப் பொறுப்புடனும் ஒழுங்குடனும் அதைச் செலவிட வேண்டும்’ என்று வலியுறுத்தியவர்

   அ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்
   ஆ) முஃப்தி கிஃபாயத்துல்லாஹ்

5. மக்கா பல்கலைக் கழகத்தின் ஷரீஆ துறைத் தலைவியாகப் பதவி வகித்த முன்மாதிரி பெண்மணி

   அ) அப்லா அல் கஹ்லாவி
   ஆ) மரியம் ஜமீலா

6. இஸ்லாமும் அடிமைத்துவமும் நூலின் ஆசிரியர்

   அ) ஷேக் முஹம்மத் காரக்குன்னு
   ஆ) கே.எம். முஹம்மத்

7. சீனாவின் ரோபோடாக் இயந்திர நாயை தாங்கள் தயாரித்ததாக தவறான தகவலைச் சொன்னதற்காக AI உச்சி மாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட பல்கலைக் கழகம்

   அ) பாரதிய ஷிக்ஷா பரிஷத் பல்கலைக் கழகம் ஆ) கல்கோடியாஸ் பல்கலைக்கழகம்

8. ஹமாஸின் ராணுவப் பிரிவின் பெயர்

   அ) இஸ்ஸத்தீன் அல் கஸ்ஸாம்
   ஆ) என்ஜீனியர் அய்யாஷ் படைப்பிரிவு

## புதிர் போட்டி மூன்றுக்கான விடைகள்

1. (ஆ) அல்பகரா 2. (அ) மிக்தாம் பின் மஅதிகரீப்(ரலி) 3. (அ) முஆத் இப்னு ஜபல் (ரலி) 4. (ஆ) நல்லொழுக்கம், நல்ல கல்வி 5.(ஆ) உஸைர் மாலிக் 6.(அ) அல்லாமா இக்பால் 7.(ஆ) எட்வர்ட் கிப்பன் 8.(அ)நிக்கோலஸ் மதுரே

**சரியான விடையை எழுதியவர்கள்:**

H.M. ஹாரூன் ரஷீத் – காரைக்கால், B.சுஹைனா தஸ்லீம் – சிதம்பரம், H.ஷாகுல் – திட்டக்குடி, ரய்யான் முஹம்மது – கடையநல்லூர், நஸீருல்லாஹ் – மேல் நல்லாத்தூர், பாலா அமீனத் – சிக்கல், ஸ்ரீமதி – மஞ்சக்குப்பம்

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

B.சுஹைனா தஸ்லீம், மஸ்தான் தெரு, கிள்ளை, சிதம்பரம்

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 31வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

# அனைவருக்கும் ஈகைத் திருநாள் வாழ்த்துகள்

**நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:**
**ரமளானில் உம்ரா செய்வது**
**என்னுடன் ஹஜ் செய்வதற்குச் சமம்.**
(நூல் : ஸஹீஹ் புகாரி)

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

தொடர்பு கொள்வீர்
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

# ஜகாத் கணிப்பான் Zakatify - Easy Zakat Calculator
## – சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் இணைய செயலி வெளியீடு







இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்று ஜகாத். முஸ்லிம்கள் தங்களிடம் 87.5 கிராம் நகை (அதன் மதிப்பிற்கான தொகை)க்கும் அதிகமான செல்வம் இருந்தால் அதிலிருந்து ஆண்டுதோறும் 2.5 விழுக்காடு கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும். ஜாகத் யார் யாருக்குக் கொடுக்க வேண்டும்? எவ்வளவு கொடுக்க வேண்டும்? என்பதைக் கணக்கிடுவதற்கான செயலியை முதன் முறையாக சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் தமிழ்நாடு மண்டலம் தயாரித்து வெளியிட்டுள்ளது.

கஅபா இருக்கும் திசையை நோக்கித் தொழுகை நடத்த வேண்டும் என்பதற்காக கிப்லாவைக் காட்டும் கருவிகள், செயலிகள் இருப்பதைப் போன்று ஜகாதிற்கான செயலி இல்லை என்ற பெருங்குறையை ஜகாதிஃபை போக்கியுள்ளது.

ஜகாத்தைக் கணக்கிடுவதற்காக பிக்ஹுஸ் சுன்னா நூலை அடிப்படையாகக் கொண்டு ஓர் இணைய தளத்தை முற்றிலும் இலவசமாக சாலிடாரிட்டி உருவாக்கி இருக்கிறது. இணைய தளத்தின் முகப்பிலேயே ஒவ்வொரு பொருளுக்கும் எவ்வளவு என்ற கணக்கீட்டு முறையை விளக்கியுள்ளது.

உதாரணத்திற்கு தங்கத்தைக் கணக்கிட விரும்புவோர் அவர் தன்னிடம் இருக்கக்கூடிய தங்கத்தின் எடையை உள்ளீடு செய்தால் அதற்கு ஏற்ற ஜகாத் தொகையைத் தெரிந்து கொள்ளலாம். அதேபோல ஒருவரிடம் இருக்கக்கூடிய வெள்ளிப் பொருள்களுக்கு, ரொக்கப் பணத்திற்கு, இடத்திற்கு, தொழில் வருமானத்திற்கு, விவசாய விளைச்சல்களுக்கு, கால்நடைகளுக்கு ஒவ்வொன்றுக்குமான தரவுகளை உள்ளீடு செய்தால், அவற்றுக்கு ஏற்ற ஜகாத் தொகையை இச்செயலி மூலம் கணக்கிட்டுக் கொள்ளலாம். இதனை PDF வடிவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பயனாளர்களின் தனிநபர் சார்ந்த எந்தத் தரவுகளும் சேமிக்கப்படாமல் இருப்பது இச்செயலி தனிச் சிறப்பு. இந்த இணைய செயலியை 2026 பிப்ரவரி 13ஆம் நாள் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழகத் தலைவர் மௌலவி முஹம்மது ஹனீஃபா மன்பயீ வெளியிட்டார். இந்த நிகழ்வில் மாநிலச் செயலாளர் கே. ஜலாலுதீன், மாநில அலுவலகச் செயலாளர் சாதிக் பாஷா, மகளிர் அணிச் செயலாளர் ஃபாத்திமா, சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் சென்னை மாநகரத் தலைவர் எம்.ஜே. சைபுல்லா, மண்டல அலுவலகச் செயலாளர் சல்மான்கான் ஆகியோர் உடன் இருந்தனர்.

வலைதள முகவரி: https://www.solidaritytn.org/zakatify

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.


Ramjan Mahal
Celebrate Every Moment
Mini Party Hall
120 members, Dining 100 members
Medium Hall
400 members, Dining 180 members
Full Mahal
3000 members, Dining 600 members
ரம்ஜான் மஹால்
RAMJAN MAHAL
Amenities
Fully air-conditioned hall
Can accommodate up to 3000 people
Ladies hall accommodation (400 people)
Dining hall for Ladies (200 people)
Common dining hall (400 people)
Car parking and Two wheeler parking facility
Mini party hall - birthday, get together, official conference
10 special rooms for marrying families
Two lifts for the public & a service lift
Power GenSet
Live TV displays and sound service available
Hall secured under CCTV
Prayer hall
044 2590 2306
+91 99624 72345
ramjanmahal@gmail.com
ramjanmahal.com
Ramjan Mahal
74/52, West Madha Church Road, Royapuram, Chennai.
Contact for Your
All Occasions and Celebrations
99624 72345

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

திண்ணமாக, நாம் இதனை (குர்ஆனை)
மகத்துவமிக்க (லைலத்துல் கத்ர்)
இரவில் இறக்கி வைத்தோம். மகத்துவமிக்க இரவு
என்னவென்று உமக்குத் தெரியுமா?
மகத்துவமிக்க இரவு ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்ததாகும்!

– திருக்குர்ஆன் 97:3–5

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 March 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

Anywhere - Anytime

- Domestic
- International
- Cargo




Send your documents & Parcels through

THE PROFESSIONAL COURIERS

Propremium a professional service › DOMESTIC › INTERNATIONAL › CARGO

BUSINESS ENQUIRY :
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

SERVICE ENQUIRY :
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com